# களம் கண்ட கவிதைகள்

பாவலர்மணி

புலவர் ஆ. பழநி



# களங்கண்ட கவிதைகள்

பாவலர்மணி புலவர் ஆ. பழநி

எழில் வெளியீட்டகம்:

48, அம்பலக்காரர் தெரு,
காட்டுத்தலை வாயில்,
காரைக்குடி
623 001

களங்கண்ட கவிதைகள்
Kalam Kanta Kavithaikal

பாவலர்மணி. புலவர் ஆ. பழநி (7-11-1931)
48, அம்பலக்காரர் தெரு,
காட்டுத்தலைவாயில்,
காரைக்குடி.
623 001

பக்கம்: 16+104=120

உரிமை: ஆசிரியற்கு.

முதற்பதிப்பு: செப்டம்பர்–1993
அச்சும் அமைப்பும்; அகரம், சிவகங்கை.

விலை: 16–00

# தலைப்புகளின் அணிவகுப்பு:

| | | |
|---|---|---|
| அ. | அணிந்துரை | v |
| ஆ. | என்னைப்பற்றி.... | xl |
| இ. | முன்னுரை | xv |
| 1 | திருக்குறள் என்காதலி | 1 |
| 2 | ஆற்றுப் படை | 10 |
| 3 | வாழை | 18 |
| 4 | பாரதி பாடிய தெய்வம்: சிவன் | 27 |
| 5 | சமுதாய வீதியில்: அதிகாரி | 39 |
| 6 | கருப்புப் பணம் | 47 |
| 7 | காந்தியார் இன்று வந்தால்... | 56 |
| 8 | பாண்டித்துரைத் தேவர் | 65 |
| 9 | பாரியும் பறம்பும் | 78 |
| 10 | தமிழ்க்கடல். இராய. சொ. | 88 |
| 11 | வள்ளல் அழகப்பர் | 94 |
| 12 | மறையாமலையா? மறைமலையா? | 102 |

# அணிந்துரை

பேராசிரியர். இராம. இராமநாதன்,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி.

'உலக வாழ்க்கையில் மகிழ்ச்சி தருவது இன்பம். அவ்வின்பம் கவிதையில் தேங்கி நிற்கின்றது' என்பான் மேலைப்புல ஆய்வாளன். வெறும்சொற்களைக் கோப்பதால் கருத்துக்கள் கிடைக்கலாம். ஆனால் அவை தகுதியோடு தக்க இடத்தில் அமைந்துவிட்டால் அதுவே கவிதையாகி விடுகின்றது. உவமைகளில் தனித்தன்மையும், உருவகங்களில் புதுவிளக்கங்களும், சொற்களில் தேன் சுவையும் கலந்து வரும்போது அதன் அழுத்தம் நம் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும். இன்றைய சமுதாயத்தின் சரிவு நிலையை மனத்தே எண்ணிச் சமப்படுத்தும் உயர் நோக்கில் உருவாகும் கவிதைகளே இன்றைய தேவை. அவ்வகையில் பாவலர்மணி பழனி அவர்களின் எழுத்துக்கள் தாழ்ந்திருக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்டும் ஒளிக் கீற்றுக்களாய்த் திகழ்கின்றன.

பாவலர்மணி அவர்களின் கவிதை தெளிவான-அழகான சொற்களில் தருக்கமுறையில் பட்டறிவுடன், உள்ளத்தில் பதியுமாறு உணர்ச்சி தோன்ற அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். பகுத்தறிவுக் கருத்துக்களையும் எடுத்துக் கூறும் திறத்தால் சமயவாதிகளும் சரி என்று ஏற்றுக் கொள்ளும் தகைமையை இவர் கவிதையில் காண முடிகின்றது.

'களம் கண்ட கவிதைகள்' என்ற இந்நூலில் 12 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் கவியரங்குகளில் பாடப்பெற்றவை என்பதிலிருந்து இவை மக்கள் மன்றத்தால் வரவேற்கப் பெற்றவை என்பதும், மீண்டும் சிந்திப்பதற்கென்று இன்று நூல்வடிவம் பெற்றுள்ளன என்பதும் விளக்கமுறும்.

திருக்குறளைக் காதலியாக உருவகம் செய்து பாடியுள்ள முதற்பாடல் கள்ளுண்ட மயக்கத்தைத் தரும் இனிய கவிதையாகும். இஃதொரு முழுமையான உருவகக் கவிதை. உருவகத்தின் முழுமையை நாம் உணருகின்ற போது நம் நெஞ்சில் நிறைவது முழுமையான இன்பம். ஆம். முழுமையான கவிதை இன்பம்.

வாழ்க்கையில் உடலும் உயிரும் நலமாக விளங்க நகைச் சுவை நல்ல மருந்து என்பர். பாவலர் மணியின் கவிதை வரிகளில் நகைச் சுவைக் கூறுகள் நளினமாய் அமைந்து நகைப்பூட்டுகின்றன. நகைச்சுவைக் களஞ்சியமாக அமைந்த 'ஆற்றுப்படை' என்னும் கவிதை, சங்க இலக்கியச்சாயலைக் கொண்டது. காரைக்குடி நகரை அறிந்தவர்கள் 'ஆற்றுப்படை'யைப் படிக்கும் போது விலா நோகச்சிரிப்பார்கள். அதுமட்டுமா? சிந்திக்கவும்செய்வார்கள்.

திரைப்படம் பொழுது போக்குக் கருவியாக இருக்கலாம். ஆனால் அதுபொழுதைப்போக்கும் கருவியாக மாறக்கூடாது என்பதையும், திரைப்படம் இருளில்தான் தோன்றும்; ஆனால் அது இளைஞர்களின் எதிர் காலத்தை இருளிலே தள்ளிவிடக் கூடாது என்பதையும் இயல்பான நகைச்சுவையுடன் வெளிப்படுத்துகின்றார். நாட்டிலே சட்டம் எப்படி இருக்கின்றது. இதோ ஒரு சான்று.

**'ஒருவழிப் பாதையிலே எதிரில் மிதிவண்டி**
**வருவதுமேன்? என்றெண்ணி மயக்கத்தால் எம்மை**

'ஆவலாய் நோக்காதீர்; அவர்வேறு யாருமல்லர்;
காவல் துறையினர்தாம்'

என்ற அடிகள் வேலிகள் பயிரைமேயும் வேடிக்கையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. தான் பாடுவது ஆற்றுப்படை என்பதனால் நமக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு பாவலர்மணிக்கு வந்துவிடுகின்றது. அவர் காட்டிய வழியில் நகைக்கடை வீதியிற் செல்கிறோம். நகை விற்கவருபவரிடம் தங்கத்தை வாங்கிய கடைக் காரர் உரைகல்லிலே வைத்து உரைக்கின்றார்; உரைக் கின்றார்; மீண்டும் உரைக்கின்றார். பாவலர் மணியின் சிலேடை கவிதையில் களை கட்டுகின்றது.

'காண்டிகை என்று கல்லில் உரைத்திடுவார்.
வேண்டி மறுபடியும் விருத்தி உரைஉரைப்பார்'

நூலுக்கு எழுதிய உரைகளில் காண்டிகை உரை, விருத்தி உரை என இரண்டிருப்பதைத் தமிழ் இலக்கணம் கற்ற வர்கள் அறிவார்கள். காண்டிகை உரை சுருக்கமானது; விருத்தி உரை விரிவானது. நகைக்கடைக்காரரின் முதல் உரை (தேய்ப்பு) இலேசாக உள்ளது. அடுத்த உரை (தேய்ப்பு) அழுத்தமாக அமையுமாம். முதல் உரை யிலேயே தங்கத்தின் மாற்று தெரிந்துவிடும். மீண்டும் அழுத்தி உரைப்பது ஏன்? அது அவர் விருத்திக்காக வாம். நகைக் கடைக்காரரின் இலாபத்திற்காகவாம். இங்கே காண்டிகை, உரை, விருத்தி என்ற சொற்களில் இன்னொரு பொருள் மட்டும் வெளிப்பட வில்லை; நகைக்கடைக்காரரின் பேராசையும் கூடவே வெளிப் பட்டு நிற்கின்றது.

'வாழை' நம் வீட்டுக் கொல்லையில் வளரும் தாவரம் மட்டுமில்லை. அன்னியச் செலாவணியை அள்ளிவரும் பொருளும் ஆம் என்று கூறும் பொழுது பொருளியலின் சாயலைக் காண்கிறோம். 'நான் வெளி நாட்டுப் பணத்தைக் கொண்டுவரும் பொருளேயன்றிக் கரும்பைப் போல வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறிய 'வந்தேறி' இல்லை, என்ற வாழையின் குரலில் 'நான் மண்ணின்மைந்தன்' என்னும் உரிமைக் குரலைக் கேட்கிறோம்.

பழம் கேட்டார் கொடுத்தேன்; இலை கேட்டார் ஈந்தேன்; பூ வேண்டும் என்றார், தண்டைத் தா என்றார்; எல்லாம்தான் கொடுத்தேன். நன்றியில்லா இம்மாந்தர் 'என் குலையினை அறுக்க' வருகின்றாரே இது என்ன நியாயம். இதுதான் மானிட தருமமா? என்று கேட்கும் வாழையின் குரல் நம் ஈரற் குலையில் என்னவோ செய்கின்றது.

பாவலர்மணி சிவனைப் பேட்டி காண்பதும், பாரதியார் அதற்குத் துணை நிற்பதும் நல்ல கற்பனை. இயற் கையே சிவன்; சிவனே இயற்கை என்ற பொருள் விளக்கம் பொருள் பொதிந்த விளக்கமாகும். சிவன் 'அர்த்த நாரி' என்பதற்குக் கவிஞர் கூறும் காரணம் புதுமையிலும் புதுமை.

'ஒருபாதி சிவப்பாக மறுபாதி கருப்பாக
உருவாகி அவன்நிற்கும் உண்மை அறிவாயா?
சுற்றிவரும் பூமிமேல் ஞாயிற்றின் ஒளிபடுங்கால்
உற்றுநீ நோக்கின் ஒருபாதி ஒளியாக
எஞ்சிய பாதி இருளாகக் கண்டிடுவாய்'

இந்த வரிகள் உணர்த்தும் உண்மை என்ன? இயற் கையை நன்றாக அறிந்தவர்கள் தாம் சிவனையும் நன்றாக அறிந்தவர்கள் என்ற உண்மையை அல்லவா?

'அதிகாரி' பற்றிய கவிதை அதிகார வர்க்கத்தின் தோலை மட்டும் உரித்துக் காட்டவில்லை; குடலையும் உருவிக் காட்டுகின்றது.

'காரி என்றால் சனிஎன்பார்; அதிஎன்றால்
பெரிதென்பார்;
ஊரினையும் நாட்டினையும் பிடித்தாட்டி
உலுக்குகின்ற
பெரிய சனியாய்ப் பிறங்குகின்றார்'

என்று கூறி அதிகாரியைக் காரணப் பெயராக்கிக் காட்டும் திறம் எண்ணி மகிழ்தற்குரியது.

'கருப்புப் பணம்'— இது ஒரு கவிதையின் தலைப்பு. பணந்தான் கருப்பு. கருப்புப் பணத்தைத் தாங்கி வரும் கவிதையோ சிவப்பு. கருப்புப் பணம் எங்கெங்கோ— எவ்வெவ் உருவிலோ ஒளிந்து கிடக்கும் என்பதைக்

**'கண்ணனும் அவதா ரங்கள்**
**ஒன்பதே காட்டி னானாம்;**
**எண்ணின் என் அவதா ரங்கள்**
**எழுதவும் முடிவ துண்டோ'**

என்ற கருப்புப் பணத்தின் பேச்சு, கருப்புப் பணத்தால் சமுதாயம் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், கருப்புப் பணத்தின் ஊடுருவல் எத்தகையது என்பதையும் தெளிவாக்குகின்றது.

என்னை இகழாதீர், என்னை உருவாக்கிய சமூக விரோதியை இகழுங்கள்; எய்தவன் இருக்க அம்பை நோவது ஏன் என்று அழும் கருப்புப் பணத்தின் குரல் இரக்கத்தை வரவழைக்கின்றது. விரக்தியின் வடிவமாக நிற்கும் கருப்புப் பணத்தின் குரலை நீங்களும் கேளுங்களேன்.

**பன்னீர் தான் சாக்க டைக்குள்**
**பாயுமேல் என்ன வாகும்?**
**தன்னீர்மை இழக்கும்; அந்தச்**
**சாக்கடைப் பெயரே தாங்கும்.**
**தன்னிலை உணரா தாரும்**
**தகாநட்புக் கொள்ளு வாரேல்**
**எந்நிலை யடைவர்? காட்ட**
**யானுளேன் எடுத்துக் காட்டா**

'காந்தியார் இன்று வந்தால்' என்ற கவிதை நம் கண்களில் ஈரக்கசிவை ஏற்படுத்தும் தன்மையது. காந்தியாரின் கருத்துக்கள் கல்லறைக்கு அனுப்பப்பட்டு விட்டன. நிர்மாணத் திட்டங்கள் நிர்வாண மாக்கப்பட்டு விட்டன. கள், சாராயக் கடைகள் நடத்தத் தடை கூட உள்ளது. இதோ கவிஞர் கூறுகிறார்

**'சட்டம் இருக்கிறது. சாராயம் கிடைக்கிறது;'**
**'காந்திபேர் வாழவைத்துக் காந்தியத்தைக்கொன்று விட்டார்'**
**'காந்தி செயந்திளனக் கொண்டாடிக் களிக்கின்றார்'**
**ஏந்திய கொள்கைகளை எங்கோ புதைத்துவிட்டார்'**

இந்த வரிகள் நாட்டின் அவலத்தை வெளிப்படுத்துகின்றன.

கோட்சே உடம்பைத்தான் சிதைத்தான். ஆனால் என் நம்பிக்கைக்கு உரியவர்களோ என் உயிரையே சிதைத்து விட்டார்கள் என்று மனம் புழுங்கும் காந்தியடிகள் இறுதியிலே வெறுப்பின் விளிம்பிற்கே வந்தவராய்

**'போய் வருவேன் என்று புகல மனமில்லை**
**போகின்றேன் நெஞ்சம் புலந்து'**

என்கின்றார்.

இழவு நிகழ்ந்த வீட்டிற்குச் சென்றவர்கள் திரும்பும் போது வீட்டுக்கு உரியவரிடம் போய் வருகின்றேன் என்று கூறமாட்டார்கள். 'போகின்றேன்' என்று தான் கூறுவார்கள், இவ்வாறு கூறுவது நம் மரபு. இங்கே காந்தியடிகளும் போய் வருகின்றேன் என்று கூறாமல் 'போகின்றேன்' என்று கூறுகின்றார். என்ன இதன் உட்பொருள்? காந்தியாரின் கொள்கைகளுக்குக் கொள்ளி வைக்கப்பட்டு விட்டது. காந்தியாரால் பெற்ற எல்லா நலன்களையும் இந்தியா இழந்து இழந்து இழவு வீடாகி விட்டது என்று காட்டும் திறம் நினைந்து நினைந்து மகிழ வைத்தாலும் நம்மை அழுது அழுது புலம்பவும் வைக்கின்றது.

'பாரியும் பறம்பும்' 'தமிழ்க்கடல் இராய-சொ' 'வள்ளல் அழகப்பர்' முதலிய பாடல்கள் கையறு நிலைத் தன்மை வாய்ந்தனவாக அமைந்துள்ளன. அவலத்தின் முழுமையையும், ஆற்றாமையின் இயல்பினையும் நாம்

ஒரு சேரக் காண்கின்றோம் நினைவாற்றலின் இமயமாக விளங்கிய தமிழ்க்கடல் இராய.சொ பற்றிய பாடல்கள் அவரை என்றும் நம் நினைவில் நிறுத்தும் பாடல்களாக விளங்குகின்றன.

வள்ளல் அழகப்பர் மானுடத்திற்கு இயற்கை கொடுத்த கொடை என்பதைக் கவிஞர் அழகாகப் பாடுகின்றார்.

கொடைவிளங்கும் இவன்கையில்
குலம்விளங்கும் வாணிகத்தில்:
கொள்கை சான்ற
நடைவிளங்கும் வாழ்க்கையிலே;
நல்லறிவு விளங்குமவன்
செயலில்; தேர்ந்த
படைவிளங்கும் ஆளுமையில்;
பண்பாடு விளங்குமவன்
சொல்லி லெல்லாம்;
தொடைவிளங்கும் ஒருமாலை
இவன்போல மானுடந்தான்
தொடுத்த தில்லை.

நூறாண்டுகள் வாழ வழிசொன்ன மறைமலையடிகள் நூறாண்டுகள் வாழவில்லை. ஆனால் அவரது புகழ் உரு பன்னூறு ஆண்டுகள் இங்கே வாழும் என்பதையும் தமிழ் எதிரிகள் மறைத்தவற்றையெல்லாம் வெளிப் படுத்திக் காட்டிய மலையை மறைமலை என்று கூறுதல் பொருந்துமா என்பதையும் புலமை நலம் தோன்ற வெளிப்படுத்தும்போது நாம் இலக்கிய இன்பத்தின் முழுச்சுவையையும் பெறுகிறோம்.

பாவலர் மணியின் பன்னிரெண்டு பாடல்களும் சுவையும் தரவல்லவை; சூடும் கொடுக்க வல்லவை என்பதை இந்நூலைப் படிப்பவர்கள் தெளிவாக அறிவார்கள்.

7.9.93
காரைக்குடி.

அன்பன்
இராம. இராமநாதன்

# என்னைப் பற்றி...

என்னைப் பற்றி நானே எழுதுவது தற்பெருமையால் அன்று; பிறர் எழுதும் பொழுது என்னைப் பற்றிய செய்தியில் சிறிது கற்பனை கலந்து விட வாய்ப்புண்டு; இது சரியா என்று நான்சரிபார்க்கவும் வேண்டும். நானே எழுதிவிட்டால் இத்தொல்லைகள் இல்லையல்லவா?

7-11-1931-ஆம் ஆண்டு காரைக்குடியில் பிறக்கும் பேறுபெற்றேன். தந்தையார் ஆண்டியப்பன்; தாயார் உமையாள். உடன்பிறந்தவர்எண்மர். இருவர் பெண்கள்; அறுவர் ஆண்கள். அது குடும்பக் கட்டுப் பாடு பற்றிய கருத்துக்கள் அழுத்தமாக வலியுறுத்தப் பெறாத காலம். அதுவே எனக்கு நல்வாய்ப்பாக அமைந்தது. இதி லென்ன நல் வாய்ப்பு என்பீர்கள். நான் என் பெற் றோர்க்கு ஒன்பதாவது பிள்ளையாக அல்லவா பிறந் தேன்.

குடும்பத் தொழில் வேளாண்மை. அதுவே வீட்டில் எல்லாருக்கும் தொழில். தமையன்மார் ஏட்டுப் பள்ளி யைத் தாண்டியதில்லை. நானும் கூட ஐந்தாம் வகுப்பே ஆகக்கூடிய படிப்பு என்ற மனத்தோடு முடித்துக் கொண் டேன். அந்தக் காலத்தில் எனக்கே கல்வியில் ஆர்வம் பொத்துக் கொண்டும் வரவில்லை; அப்படிவந்திருந்தால் உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்து படிக்க எங்கள் வீட்டின் பொருளாதார நிலை உகந்ததாகவும் இல்லை.

பிழைக்கும் வழி எனக்கு அழைப்பு விடுத்தது. வட்டிக் கடையில் இரண்டாண்டுகள்; துணிக்கடையில் இரண் டாண்டுகள்; பெட்ரோல் விற்பனை நிலையத்தில் இரண் டாண்டுகள்; பல்பொருள் அங்காடியில் ஓராண்டு;— இப்படிக் காலம் ஓடிக்கொண்டிருந்தது. அதன் பின்னர்க் குடும்பத் தொழிலான வேளாண்மை ஏறத்தாழ

எட்டாண்டுகள் என்னைச் சிக்கெனப் பற்றிக் கொண்டு விட்டது. இங்கே ஒன்றை நான் குறிப்பிடவேண்டும். வட்டிக்கடைமுதல் வயல்வெளித் தொழில் வரை ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் 'கண்டது கற்கும்' தொழிலையும், கற்றவற்றைச் சிந்திக்கும் இயல்பையும் நான் கை விடாமல் பற்றிக் கொண்டிருந்தேன்.

1950- இக்காலத்தில் திராவிடர் இயக்கம் தமிழர் உள்ளங்களில் வேர்மட்டும் பரப்பவில்லை; விழுதையும் இறக்கியது. கற்பதும் சிந்திப்பதும் இரு கண்ணெனக் கொண்ட என்னை இவ்வியக்கம் தன்வயப்படுத்திக் கொண்டதில் ஒரு வியப்பும் இல்லைஅல்லவா?

இவ்வியக்கம் என் சிந்தனையைக் கூர்மைப் படுத்திச் செழுமைப்படுத்தியது, இன்னும்படி, இன்னும்படி என்று பின்னும்படிக்கத் தூண்டியது. திராவிடநாடு, போர்வாள், திராவிடன் இவ்வேடுகளை நான் ஏடுகளாக எண்ணியதில்லை; வேதப்பொத்தகங்களாகவே கருதினேன். இவ்வேடுகளுக்குப் பின் வந்த முரசொலி, தென்றல்— இவ்வேடுகளும் என்னை மீட்டுருவாக்கம் செய்வதில் கணிசமான பங்காற்றின.

இதன் விளைவு? தமிழ்மீது, தமிழ் இனத்தின் மீது, தமிழ் இலக்கியங்களின் மீது ஆராக் காதலாக உருமாறியது. தமிழ் இலக்கியங்களை நேரிடையாகக் கற்கும் அளவுக்கு எனக்கு மொழியறிவு இல்லை. இதனால் மொழியறிவைப் பெறும் முயற்சியில் முனைந்து நின்றேன். அந்த முனைப்பு என்னை மேலைச்சிவபுரி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் மாணாக்கனாக்கிற்று.

1959-இறுதியாண்டில் பயின்று கொண்டிருக்கின்றேன். இன்னும் ஒரு திங்களில் தேர்வு முடிந்துவிடும். பிறகு...? கண்களிலே வண்ணக் கனவுகள் வலம்வந்து கொண்டிருந்தன. சற்றும் எதிர்பாரா வகையில் கனவுகள் அறுபட்டன. ஏன் என்கிறீர்களா? வால்குடல் அழற்சி நோய்க் கொடுமையால் வால்குடல் அறுவைசெய்யப்பட வேண்டிய நெருக்கடி நிலை வந்ததனால்தான்.

'வாலு போச்சு; கத்தி வந்தது டும் டும்' – இது ஒரு பழையவேடிக்கைக் கதைப்பாட்டு வரி மட்டுமன்று; என் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு பொருள் பொதிந்த பாடலுமாகும். வால்குடல் வெளியேற்றப்பட்ட பொழுது நுரையீரலில் ஒரு கட்டியை உருவாக்கி வைத்து விட்டுத் தான் சென்றது. நுரையீரல் கட்டியை அகற்றிக் கொள்வதற்காகச் சென்ற நான் ஒரு பக்க நுரையீரலையே பறிகொடுத்து விட்டு வேலூரில் இருந்து வீடு திரும்பினேன். இதனால் உரியகாலத்தில் புலவர் தேர்வினை முடிக்க முடியாமல் ஒரு வழியாக 1962–இல் புலவர் பட்டத்தைப் பெற்றேன்.

1964–ஆம் ஆண்டிலிருந்து காரைக்குடி மீ.சு.உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியப் பணிபுரிந்தேன். 1968-ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருவள்ளுவர் ஈராயிரமாவது ஆண்டினை ஒட்டி நடத்திய **திருக்குறள் புத்துரைப் போட்டி** யில் பரிசு பெற்றேன். 1973-இல் இதே கழகம் நடத்திய செய்யுள் நாடகப் போட்டியில் யானெழுதிய **'அனிச்சஅடி'** முதற்பரிசிலைப் பெற்றது. தமிழகத் தமிழாசிரியர் கழகம் நடத்திய செய்யுள் நாடகப் போட்டியில் யானியற்றிய **'அன்னிமகள்'** மூன்றாம் பரிசினைப் பெற்றது.

1974-இல் நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக் கழகம் அனிச்சஅடி நாடகத்திற்கு ஒரு திறனாய்வு அரங்கு நடத்திப் **'பாவலர் மணி'** என்னும் பட்டத்தினை வழங்கியது. 1980-இல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் **'கவிஞர்கோ'** எனும் பட்டம் வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

1983–இல் **'பண்டித மணியின் நாடகத்தமிழ்'** என்னும் திறன்நூல் வெளியாயிற்று. 1985–ஆம் ஆண்டு **,சாலிமைந்தன்'** காப்பியம் என்னால்வெளியிடப்பட்டது.

1989–ஆம் ஆண்டு 'பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா?', என்னும் ஒப்பீட்டு நூலை வெளிக்கொணர்ந்தேன்.

1990–இல் **'கானல்வரியா? கண்ணீர்வரியா?'** என்ற திறன்நூல் வெளியாயிற்று. 1991–இல் **'இளங்கோவடிகளின் காப்பியக் கலைத்திறன்' 'கோவலன் வீழ்ச்சியும் இளங்கோ மாட்சியும்'** என்ற நூல்கள் வெளியாயின.

29–4–91–இல் தமிழக அரசு பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழாவில் **'பாவேந்தர் விருது'** வழங்கிச் சிறப்பித்தது.

'உயிர்தவச் சிறிது; காமமோ பெரிது' என்ற குறுந்தொகை அடிக்கொப்ப இலக்கியப்பணி செய்யும் ஆர்வம் என்னுள் மிகப்பெரிதாக எழுகின்றது; நோய்க்காளான நலிவுற்ற உடல்வன்மையோ தவச் சிறிதாக உள்ளது. இன்னும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் முன்னோக்கித் துரத்த, நலிவுற்ற உடலோ பின்னோக்கி இழுக்கின்றது. இக்கயிறிழுப்புப் போராட்டத்தின் முடிவு? முடிவு, முடிவிலேதான். அதனையும் எதிர்காலம்தான் கூற வேண்டும்.

30–8–1993 அன்பன்
காரைக்குடி. **ஆ. பழநி.**

# முன்னுரை

களங்கண்ட கவிதைகள்—இத்தலைப்பைப் படித்தவுடன் ஏதோ போர்க்களத்தைக் கண்டு அங்குப் பெருகியோடும் குருதி யாற்றிலே குளித்துவந்த கவிஞன் பரணிபாடுகின்றானோ என எண்ணி மயங்க வேண்டா. களம் என்றால் நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்கு என்றும் பொருள் உண்டு. இக்கவிதைகள் அரங்கத்தைக் கண்ட—இன்னும் விளக்கமாகச் சொன்னால் அரங்கேறிய கவிதைகள் என்பதுதான் சரியான பொருள். நாடகத்தில் 'களம்' என்ற சொல் நிகழ்ச்சி நடக்கும் இடத்தைத்தானே குறிக்கும்?

இங்குத் தொகுக்கப் பெற்றுள்ள கவிதைகளிற் பெரும்பாலன வாழ்க்கைப் போராட்டத்தை மையமாகக் கொண்டு பாடப்பட்டமையால் இவை களங்கண்ட கவிதைகள் ஆயின என்று கொண்டாலும் தவறில்லை. எப்படியோ கவிதை களத்திற்குவந்துவிட்டது. சந்திப்பது உங்கள் பொறுப்பு.

நான் பழைய மரபையும் போற்றுவேன்; புதுமை வரவையும் ஏற்றுவேன். ஏற்றுவதும் போற்றுவதும் பழைமை, புதுமை என்பதற்காக அன்று; அவை பயன்தரத் தக்கனவா என்று பார்த்து. கவிதையைப் பொறுத்த மட்டில் எனக்கென்று சில நெறிமுறைகள் உண்டு. அந்நெறிமுறைகளை இத்தொகுப்பில் பேணிப் போற்றியுள்ளேன்.

கவிதைகள் வாழ்க்கைக்குத் தேவையான செய்திகளைத் தாங்கிவரும் வாகனங்கள்தாம். இதிலே எனக்குக்கருத்து வேறுபாடில்லை. சிலர் மிதிவண்டியாகக் கருதுகிறார்கள்; சிலர் மகிழுந்தாக்கி மகிழ்கிறார்கள்; சிலரோ சரக்குந்து (Lorry) என்பார்கள்; மற்றும் சிலர் தொடர்வண்டி (Goods Train) என்பார்கள். நான் அதனைச்சித்திரத்தேர்

என்று கருதுபவன். அது அழகியதாகவும் இருக்கவேண்டும்; மனங்களை விரைந்து கடக்கும் ஆற்றலுடையதாகவும் இருக்கவேண்டும். அழகற்ற பயனும், பயனற்ற அழகும் கவிதைக்கு நல்லதல்ல. அழகும் பயனும், ஒட்டிப்பிறந்த சயாமிய இரட்டையர்களைப் போலக் கவிதை துலங்கவேண்டும் என்பதுதான் என்கருத்து. இலக்கணத்தை நான் எடுத்து மொழிந்து விட்டேன். இவ்விலக்கணம் இக்கவிதைகளில் உள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டியது உங்கள் கடன்.

'திருக்குறள் என்காதலி' என்ற பாடல் 25–ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாடப்பட்டது. வள்ளல் அழகப்பர் என்ற கவிதை இந்த ஆண்டில் பாடப்பட்டது. ஏனைய பாடல்கள் இடைப்பட்ட காலங்களில் பாடப்பட்டன. பாடல்களுக்கிடையே 'தலைமுறை இடைவெளி' இல்லை என்றுதான் நான்கருதுகின்றேன். எப்படி இதனை உறுதியாகச் சொல்கிறாய் என்று கேட்பீர்கள். கடந்த இருபத்தைந்தாண்டுகளில் வாழ்க்கையைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் எத்தகைய 'குட்டிக்கரண'மும் நான் அடிக்கவில்லை என்ற உறுதியினால்தான் இவ்வாறு கூறுகிறேன்.

இந்நூலுக்கு என் இனிய நண்பர் பேராசிரியர். **இராம. இராமநாதன்** அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அவர் நூலை மட்டும் படித்தவர் அல்லர். என்னையும் நன்கு 'படித்து' அறிந்தவர். ஆதலின் அவர் நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரை நூலை அணி செய்யும் அணிந்துரை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. என்இலக்கிய வேட்கை ஊற்றின் வடிகாலேஅவர்தான். அவர்க்கு எப்படி நன்றிகூறுதல்?

நூலை அழகும் பயனும் நிரம்ப ஆக்கித்தந்த **கவிஞர். மீரா, புலவர் வரதராசனார், அகரம் அச்சகத் தொழிலாளர்கள்** ஆகியோர்க்கு என் நன்றி.

7.9.1993 அன்பன்
காரைக்குடி. **ஆ. பழநி**

*திருவள்ளுவர் ஈராயிரமாவது ஆண்டில் பொன்னமராவதியில் நடைபெற்ற கவியரங்கில் பாடப் பெற்றது.*

# 1 திருக்குறள் என் காதலி

என்னைப்போல் ஆண்டினிலே இளையாள் இல்லை;
ஈராயி ரம்ஆண்டு மூத்தாள்; நானோ
மின்னைப்போல் கட்டிளமை பெற்றே னில்லை;
மீசையிலே விடிவெள்ளி தோன்றக் கண்டீர்;
சின்னவடி வுடையவளும் வளர்ந்த நானும்
சேர்ந்தின்பம் துய்க்கவென் றீர்; போயும் போயும்
பொன்னமரா வதியாருக் கிந்த ஆசை
பூத்ததுதான் ஏனென்று புரிய வில்லை.

வள்ளுவர்செய் திருக்குறளாம் இளைய பெண்ணை
வளர்கின்ற நூலகமாம் காவிற் கண்டே
உள்ளுருகி நின்றதுவும், அவள்ந லத்தை
உண்டுசுவை யுற்றதுவும், மணமு டித்து
விள்ளரிய இல்லறத்தில் மேவிப் பின்னர்
விரும்புகின்ற கல்வியினால் பிரிந்து சென்று
கள்ளொழுகும் மலர்க்குழலை மீண்டும் கூடிக்
களித்ததுவும் உருவகித்துப் பாடு கின்றேன்.

---
கட்டிளமை—திருக்குறள் நூல் கட்டடத்தால் (Binding) சிறந்தது

காலத்தை வென்றிருக்கும் அறிவுப் பூக்கள்
கமழ்ந்திருக்கும்; கதைத்தளிர்கள் அசைந் திருக்கும்;
ஞாலத்துச் சிந்தனையாம் மரங்கள் வானை
நண்ணுவபோல் வளர்ந்திருக்கும்; எக்கா லத்தும்
பாலத்தைப்போல் இணைக்கும் வரலா றென்னும்
பசுங்கொடிகள் மிடைந்திருக்கும்; அறவோர் வாக்காம்
சீலத்துப் பூமலர்ந்த சுனைகள் ஓர்பால்
சிரித்திருக்கும்; காண்பவரை இழுத்தி ருக்கும்.

தெள்ளுதமிழ்ப் பாவலர்கள் பாடி வைத்த
செழும்பாட்டாம் மான்கூட்டம் துள்ளிச் செல்லும்;
அள்ளுசுவைக் காப்பியமாம் மயில்கள் தோகை
அசைத்தெதிரில் ஆடிவரும்; அறிவு நூலாம்
விள்ளரிய பேரருவி குன்றி ருந்து
வீழ்ந்திருக்கும்; ஆய்வுடையார் நூல்கள் என்னும்
கள்ளொருபால் வடிந்திருக்கும் நூல கத்துக்
காவினுளே நானுழைந்து வந்த போது.

மின்னொன்று கண்ணிலுறப் பண்டை யாழை
மீட்டுமிசை செவிநுழைய உளஞ்சி லிர்த்தே
என்னென்று காணக்கண் நோக்கி நின்றேன்;
என்சொல்வேன்! என்சொல்வேன்! அழக னைத்தும்
விண்ணின்று கீழிறங்கி வருமோ என்று
வியப்புற்றேன்; திகைப்புற்றேன்; இமைய சைவால்
பெண்ணென்று நான்தெளிந்து பேரே தென்றேன்;
பிறைநுதலாள் 'குறள்' என்றாள்; மனமகிழ்ந்தேன்.



முத்திருக்கும் அவள்வாயில்; இதழி ரண்டும்
முறுவலித்த படியிருக்கும்; கண்ணோ மீனை
ஒத்திருக்கும் என்றாலும் காண்பார் உள்ளில்
ஊடுருவித் தைத்திருக்கும்; குழலிற் பூவின்
கொத்திருக்கும்; காளையர்தம் நெஞ்ச மெல்லாம்
குடியிருக்கும் படியிருக்கும்; தோற்றங் கண்டு
மத்திருக்கும் தயிர்போலக் கலக்க முற்று
மறுகிநிற்கும் படியழகு மலிந்தி ருக்கும்.

பண்ணிருக்கும் அவள்மொழியில்; செயலில் எல்லாம்
பண்பிருக்கும்; அன்பிருக்கும்; முகத்தைப் பார்த்தால்
விண்ணிருக்கும் மதியம் போல் விளங்கி நிற்கும்;
விரலசைவில் நடனத்தின் திறமி ருக்கும்;
மண்ணிருக்கும் ஊற்றைப் போல் ஆசை பொங்கும்
மனமிருக்கும்; பிறர்மறைத்துச் செய்தி சொல்லும்
கண்ணிருக்கும்; அக்கண்ணில் கனிவி ருக்கும்;
காதலெனும் ஒளிப்புனலைக் கான்றி ருக்கும்.

இடையிருக்கும் நூல்போல; நடையில் தாளம்
இணைந்திருக்கும்; சிறந்திருக்கும்; காமன் என்பான்
படையிருக்கும் கொட்டில்போல் உடலி ருக்கும்;
பணைத்திருக்கும் தோளிரண்டும் பொய்யாஆற்றின்
மடையிருக்கும் ஊர் போலச் செழித்தி ருக்கும்;
மதியத்தின் கீற்றுப்போல் நுதலி ருக்கும்;
நடையிருக்கும் ஈரடியின் எழுசீர் கண்டால்
நயமிருக்கும்; எந்நலமும் நயந்தி ருக்கும்.

ஈரடியின் எழுசீர்—இரண்டு அடிகளையும் ஏழு சீர்களையும் கொண்ட திருக்குறளைக் கண்டால்.

*எத்திறத்தும் இணையில்லா அடியி ரண்டை
எடுத்துவைத்த நடைக்கேயென் இதயம் மாயும்;
அத்திறத்தை உளத்தெழுதி அருகிற் சென்றேன்;
‡அதிகாரம் மிகவுடையாள் ஆத லாலே
நத்தியவள் மேனிதொடல் நன்றன் றென்று
நான்தயங்கும் வேளையிலே பறக்கும் வண்டு
தொத்தியவள் தோளேற அதனை யோட்டத்
துணைபுரிவான் போலவளைத் தொட்டு நின்றேன்.

தீண்டியதும் மெய்சோர்ந்தாள்; தழுவிக் கொண்டேன்
தீராத வேட்கையினால்; ஆற்றில் ஊற்றுத்
தோண்டியவன் புதுநீரைப் பருகல் போலத்
தொலையாத இன்பெல்லாம் துய்த்த பின்னர்
வேண்டியவள் நலமெல்லாம் பார்த்துப் பார்த்து
†விழிப்புலனும் கூர்மழுங்கிச் சோர்ந்தி ருக்க
நீண்டிருக்கும் காலத்தை உணர்ந்த தாலே
நீங்காத நினைவினராய்ப் பிரிந்து சென்றோம்.

விடிந்திடுமோ இரவென்று மனம்நி னைக்கும்;
விழியிமைகள் உறக்கத்தை வெறுத்தி ருக்கும்;
கடிந்திடுமோ அவளன்னை? எற்க லந்த
காரணத்தை அறிந்திடுமோ? பகலிற் காண
முடிந்திடுமோ? அயலவரின் கண் மறைக்க
முயன்றிடுமோ? முயலாதேல் உடலில் ஆவி
படிந்திடுமோ? எனப்பலவாக் கவன்ற போது
பகலவனும் எனக்கென்றே கிழக்கெ ழுந்தான்.

* எப்படிப் பார்த்தாலும் இரண்டடிகளும் ஒத்திருக்கவில்லை. ஒன்று உயரம். மற்றொன்று குட்டை. இந்த நொண்டி நடைக்கே என் உள்ளம் மாய்கிறதே:

‡ 133- அதிகாரங்களை யுடையவள்

† எழுத்துக்களை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தால் விழி கூர் மழுங்கிச் சோரும்.



மண்தோயும் கால்களிலே வெப்பம் தாக்கா
மாலைமணி நான்கிருக்கும் போது, தெற்குப்
பண்தோயும் குரலுடையாள் ஆயம் நீங்கிப்
பயில்விடமாம் நூலகத்துச் சோலை சென்றேன்;
கண்தோயும் படியிருந்தாள்; கைகள் தோய்ந்து
கலப்பதற்கு முடியாமல் இற்செ றித்துப்
புண்தோயும் மனத்தினனாய் உழலு மாறு
பூட்டிவைத்தாள் நூலகராம் அன்னை என்பாள்.

அன்னையவள் கண்மறைத்து மறுநாட் காலை
அவளிருக்கும் இடம்சென்றேன்; †ஆயம் சூழப்
புன்னைமர நீழலிலே இருந்தாள்; ‡வேலிப்
புறத்தினிலே நானிருத்தல் கண்டி ருந்தும்
முன்னையொரு தொடர்பில்லாள் போலி ருந்தாள்;
*முகத்தினையும் மறுபுறத்தில் திருப்பிக் கொண்டாள்;
என்னையிவட் கூடும் வழி? பாங்கி மாரின்
எதிர்நின்று குறையிரக்க முடிவு செய்தேன்.

## வேறு

திரிமேல் எரிசுடர் போல் திகழ்கின்ற பேரறிவுப்
பரிமேல் அழகியெனும் பாங்கியொடு மணக்குடத்தி
ஒருங்கிருக்கும் போதில் உடன் நண்ணிக் கொடிபோல
மருங்கிருக்கும் குறள்மகளை மருவத் துடிப்பதையும்
‡‡ விளங்காப் புதிராக விளங்கிழையாள் இருப்பதையும்
துளங்காத என்னுள்ளம் துளங்கிச் சுழல்வதையும்

† மற்ற நூல்களுக்கு நடுவில் இருந்தாள். ‡ திருக்குறள்அலமாரிக்குள்ளும் நான் அலமாரிக் கதவுக்கு வெளியேயும் இருக்க நேர்ந்தது.

* நூல் அடுக்கிவைக்கப்பட்ட போது முதுகு தான் நமக்குத் தெரியும்; முகம் உட்பக்கமாகத் தானே இருக்கும்.

‡‡ முதலில் படிக்கும் பொழுது பாடலின் பொருள் எளிதில் விளங்காமை இவ்வாறு கூறப்படுகின்றது.

கயலோடுங் கண்ணி கருத்துள் நிறைந்து
புயலோடும் சிறுதுரும்பாப் போக்கி யலைப்பதையும்
எடுத்து மொழிந்தேன்; என்கதையைப் பாதியிலே
தடுத்து நிறுத்தித் தனியிடத்தே எனை உய்த்து
நெஞ்சங் கவர்ந்தாளை நெறிப்படுத்தி, உணர்புலன்கள்
அஞ்சும் சுவைக்கடலில் ஆழ்ந்து கிடக்கும்வணம்
‡ பாங்கி துணையாகப் பகற்குறியில்கூடியபின்
நீங்கினேன் அந்த நேரிழையை; இச்செய்தி
ஓங்கும் மலைமேல் ஒளியேற்றி வைத்ததுபோல்
நீங்காமல் எங்கும் நிறைந்திருக்க, ஆங்கயலார்
'யாரோ குறள்மகளாம்; எழிற்கலைகள் நிரம்பவரும்
தேரோ எனச்சொல்லும் சீர்த்தி மிகுந்தவளாம்;
நூலகச் சாரலிலே நுடங்கிடையைக் கண்டானாம்!
மாலகத்த னாகி மற்றுளவெ லாம்மறந்து
சிந்தை திரிந்தானாம்' எனப்பேசும் அலர்மொழியைத்
தந்தை யறிந்தார்; தணலிற் கடுகாகி
'ஏடா! மகனே! இதற்கா உனைப்பெற்றேன்;
கூடாச் செயல்செய்தாய்; கொதிக்குதடா என்னுள்ளம்;
பள்ளியிற் சென்று படிக்காமல் மயக்குமொழிக்
கள்ளியின் பின்னே கருத்தழிந்து போயினையே!
கண்டாரை எல்லாம் கைகலந்து, தன்னலத்தை
உண்டாரை எல்லாம் ஒழிப்பதிலே பேர்போன
வடக்கத்தி யாளின் வயிற்றுதித்த பெண்களிலே
விடக்கத்தி போன்ற விழியுடைய இந்தியெனும்
பருவம் முதிராத பாவையைக் காதலினால்
மருவ விழையாநின் மாண்பினைப் போற்றுகின்றேன்;

‡ பரிமேலழகர், மணக்குடவர் துணையோடு குறள்தரும் இன்பத்தை நுகர்ந்து.



என்றாலும் இந்நாள் எவ்வுலகும் போற்றிசெய
நின்றாளும் பெற்றிமையாள் நெடுநாளாச் சேர்ந்துள்ள
அஞ்ஞான இருள்போக்கும் அறிவுச் சுடரொளியாள்
விஞ்ஞான வித்தகியை வெறுத்தல் அழகிதன்று;
விஞ்ஞான வித்தகியை விரும்பா தொழியினும்நீ
எஞ்ஞான மும்கொடுக்கும் எழிலரசி ஆங்கிலத்தைக்
காதலித்தல் கடனாகும்; காதல் கொளவிலையேல்
பேதலித்துப் போகாமல் பெருவணிகன் மகளான
கணிதக் குமரி கரந்தொடலாம்; தொடவிலையேல்
மனித குலத்தாரின் வரலாற்றுச் செல்வியாம்
மின்னை மணங்கொளலாம்; மேலாருள் ஒருத்திக்கே
உன்னைக் கொடுப்பாயேல் உளமார வாழ்த்திடுவேன்;
அத்தனையும் நீக்கிவிட்டு யாரோ ஒருத்தியினை
நத்திக் கிடத்தல் நகையாகும் எனச்சொல்ல,
வெள்ளம் உடைத்தபினர் வியன்கரையை உயர்த்துதல் போல்
உள்ளக் கலப்பால் ஒருமனத்த ராயபினர்
வேண்டா உறவென்று வெறும்பேச்சுப் பேசுவதால்
தூண்டா விளக்கேபோல் துலங்குகின்ற எம்காதல்
மாயாது; தீயாது; மற்றெவரின் பேச்சுக்கும்
சாயாது எனஎடுத்துச் சாற்றினேன்; என்துணிவைக்
கண்டார் சினந்தார்; கண்களிலே தீபறக்க
நின்றார்; நடந்தார்; நெடுமூச்சை வெளிப்படுத்தி
இருந்தார்; எழுந்தார்; இவன் இனிமேல் எப்படியும்
திருத்தான் எனஎண்ணித் தெளிந்தார்; எனையழைத்து
அன்பு கனிந்திருக்கும் அருள் நகையை முகந்தேக்கி

முன்புநீ கண்டுவந்த மொய்குழலை மணங்கொண்டு
வாழிநீ என்றுரைத்த வாக்கினால் தேனிறைந்த
தாழியுள் வீழ்ந்து தவிக்கின்ற எறும்பைப் போல்
இன்பத் திளைப்பில் இருந்தேன் நான்; மறுநாளே
முன்பு மொழிந்த மொழிப்படியே என்தந்தை
அறஞ்சான்ற கொள்கையினார், அருளோ டறிவுநலத்
திறஞ்சான்ற பேரறிஞர் தேர்ந்து துணைக்கொண்டு
மணம்பேசக் †கழகமெனும் மணமகளின் வீடுசென்றார்;
குணம் பேசி இனம்பேசிக் குறித்த பரிசத்தைத்
தந்தார்; மணமகளைத் தன்னுட னேயழைத்து
வந்தார்; எதிர்நோக்கி வாசலிலே காத்திருந்த
என்கையிற் றந்தார். இருகையால் அவளுடைய
பொன்கையைப் பற்றிப் பூரித்தேன்; அன்றுமுதல்
எங்களுக் கென்றே இயற்றிவைத்த* தனியறையில்
திங்களும் நானும் சேர்ந்து மகிழ்ந்திருந்தோம்;
கூடும் பொழுதெல்லாம் குறியாத புத்தின்பம்
தேடும் பொழுதாத் திகழ்ந்திருக்க வாழ்ந்திருந்தோம்;
இரவோ பகலோ இரண்டிடத் தும் எங்கள்
உறவோ வளர்பிறைபோல் ஓங்க, உறங்கையிலும்
‡மார்பை அகலாது மலர்விழிகள் துயில்வாளின்
சார்புச் சுகத்தில் தனியின்பம் கண்டிருக்க,
கல்லூரி சென்றுமேற் கல்வி தொடருதற்கென்
உள்ளூறி நிற்குமென் ஒண்டொடியை நான் பிரிந்தேன்;
திங்கள் இரண்டு செல்லுமுனே என்னுடைய
கண்கள் அவளைக் காட்டென் றடம்பிடிக்க
புத்தகம் ஒன்றைப் புரட்டினேன்; எழுத்தெல்லாம்

---

† கழகம்—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். *பரிசம்—நூலுக்குரிய விலை. தனியறையில்—படிப்பறையில். ‡ சிலர் புத்தகத்தை விரித்தவாறே தன்மார்பில் வைத்துக் கொண்டே உறங்குவர். இவ்வியல்பு இவ்வாறு கூறப்படுகின்றது



சித்திரத் தாளின் சேல்விழியை நினைவூட்ட
கோத்த உணர்ச்சிக் குறியெல்லாம் கண்ணொழுகும்
நீர்த்துளிபோற் காட்சிதர, நீள்கரத்தை நீங்கி
உடைந்திருக்கும் வளைபோல் உயிர்மெய் எழுத்தினிலே
மிடைந்திருக்கும் கொம்பெழுத்து மேல்நிற்க,
முடிவிடத்தில்
இட்டிருக்கும் புள்ளி இளையாள் அவள்முகத்தில்
பொட்டிருந் தாற்போல் பொலிந்திருக்க, மனமுடைந்து
மூடினேன் புத்தகத்தை; முந்நான்கு மாதங்கள்
ஓடிய பின்னர் ஓடிவந்தேன் அவட்காண
†முன்னை யறியாள்போல் முகந்திருப்பிக்
கொண்டிருந்தாள்;
என்னை புதுமை! எனக்கவன் றவள்தோழி
பரிமேல் அழகியின் பாங்கணைந்து இவள்செயலுக்
குரிய விளக்கம் உரையென்றேன்; எனைநோக்கி
புனைகதைஎன் றோர்பரத்தை புராணப் பரத்தையொடு
மனையழிக்கும் மேற்புலத்து மயக்கு மொழிப்பரத்தை
என்ன இவர்தம் இளநலத்தை உண்டுவந்த
உன்னை வெறுத்தே ஊடியதில் தவறுண்டோ?
என்றுரைக்கக் கேட்டேன்; இனிமேல் இவட்பிரிந்து
சென்றெவர் மார்பினையும் சேரேன் என உறுதி
சொன்ன பிறகு சுடர்த்தொடியின் சினமாற்றி
நன்னர் விளங்கும் நகைமுகத்தி லேதவழச்
செய்தாள்; அவள்செய்த செயலுக்கு நன்றிசொலித்
தள்ளுண்டேன் ஆசையினால்; தையல் அவள்நலமாம்
கள்ளுண்டேன் நெஞ்சம் களித்து.

---

† நூல்களைக் கொஞ்சகாலம் இடையீடுபட்டுப்படித்தால் உடனேயே பொருள் விளங்காது.

காரைக்குடித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில்
நடத்தப்பட்ட சங்கப்புலவர் விழாவில்
பாடப் பட்டது.

# 2 ஆற்றுப் படை

'எங்கிருந்து வருகின்றீர்! யார்நீவிர்! தண்முகத்தில்
பொங்கும் அறிவுநலம் பூத்திருக்கக் காணுகிறேன்;'
என்றே வினவும் இயல்புடையீர்! பழவகைகள்
நன்றே தெரிந்து நாடும் பறவைகள்போல்
இலக்கியக் கூட்டம் நடக்கும் இடம் தேடிப்
‡புலக்குணாத் தேடும் இலக்கியப் *புள்ளாவேன்;
காரைக் குடிவாழ் தமிழ்ச்சங்கக் கடலினிலே
நீரைக் குடித்து நிமிர்ந்த முகிலாவேன்;
மேலாம் அறிவுடையார் மேனாளில் ஆக்கிவைத்த
நூலாய்ந்து கேட்ட நுணுக்கத்தாற் பெருத்தவன் நான்;
அத்தமிழ்ச் சங்கம் அறிவுப் புலவோர்க்கு
முத்தமிழ் விழாவை முனைந்தின் றெடுக்கிறது;

‡ புலக்குணா--அறிவுக்கு உணவு. *புள்--பறவை



எங்கே தமிழோசை எனச்செவியால் ஓர்ந்திடுவீர்!
அங்கேநீர் சென்றால் செவிகுளிர ஆர்ந்திடலாம்;
வண்டிகளின் போக்கு வரத்து மிகுந்திருக்கும்
கண்டு விலகிக் கருதி இடப்புறத்தைக்
கொண்டு நடமின்! கூட்டமொன்று நடுத்தெருவில்
நின்று கடுங்குரலில் வாதம் பல நிகழ்த்தும்
உந்துகள் நிற்கும்; கதறி ஒலிகொடுக்கும்;
சந்து கொடுக்காராய்ச் சற்றும் தணியாராய்
எடுத்த குரலால் இரைந்திடுவார்; சண்டைதான்
அடுத்ததோ என்றே அயர்வேதும் கொள்ளாதீர்!
நாட்டைக் கெடுக்கும் நல்லனவல் லாதவற்றை
ஓட்டும் வகையறிய *உன்னினரோ! இல்லை! இல்லை!
முன்னணி நடிகை முதற்குழந்தைக் கார்தகப்பன்
என்பதே ஆங்கிருக்கும் இளைஞர்களின் ஆராய்ச்சி;
காதுகளைப் பொத்திக் கவனமாய் உங்கள்
பாதம் தொடர்மின்! தொடர்ந்தாலப் பாதையிலே
ஆடை குறைந்தவோர் அழகியின் ஓவியத்தை
மேடையிலே ஏற்றி மேற்செல்வார் கண்களினைத்
தொட்டிழுக்க வைத்திருப்பர்; தோன்றும் திரைப்படத்தைக்
கட்புலனாற் காணக் கமலா திரையரங்கம்
எழுவீர் இளைஞர்களே என்ற குறிப்பினையும்
பழுதின்றி அங்கே பதித்திருப்பர்; அவ்வழியே
ஈருருளி வண்டியிலே எதிரெதிரே வருபவர்கள்
பார்வை கவருமந்த ஓவியத்தைப் பார்த்தபடி
முட்டி விழுவார்கள்; முகத்திற் சினமிலராய்த்
தட்டுவார் தூசியினை; தையலின் ஓவியத்தைப்

* உன்னினரோ--எண்ணினார்களோ.

†படைக்கண்ணால் மீண்டும் பார்த்துச் சுவைத்துக்
கடையிதழிற் சிறியநகை கட்டவிழ வண்டியைத்
தள்ளி நடப்பார்கள்; தள்ளரிய காட்சியினை
எள்ளி நகைத்துநீர் ஏகுதிரேல் ஈக்கூட்டம்
‡முற்றிக் கிடக்கும் வடைகளை மூத்தவரே
சுற்றிக் கிடந்து சுவைசுவைஎன் றுண்ணுகின்ற
காட்சியைக் காண்பீர்! காசு கொடுத்தந்த
மீட்சியிலாக் கொடுநோயை வாங்காதீர்; மேற்சென்றால்
நடுவர் தலைமையிலே 'நல்ல'தோர் பட்டிமன்றம்
முடுகி நடக்கும்; முழுமதி மடவார்கள்
அணிஅணி யாப்பிரிந்து அருமைத் தமிழில்
மணிமணி யாக வார்த்தைச் சரந்தொடுப்பார்.
அகர முதலியினும் காண்டற் கரிதான
நகைமொழிகள் பன்னூறு நடமாடும் அந்த
இடந்தான் குழாயடியாம்; இடையில் குழாயென்னும்
நடுவர் நிலைமைக்கு நாணித் தலைகவிழ்ந்து
சொட்டுக் கண்ணீரை விட்டுக் கலங்கி நிற்பார்.
மட்டுறையும் தாரீர்! மற்றொன்றும் காணுதிரேல்
மூக்கில் விரல்வைப்பீர்! முதியவரும் இளையவரும்
*தீக்கொழுந்து மேனித் தெரிவையரும் ஆடவரும்
ஆடுகளும் மாடுகளும் அணுவளவும் பேதமின்றித்
தேடும் குழாயடியில் தீர்த்தங்கள் ஆடுவதைக்
காணப் பலகோடிக் கண்வேண்டும்; கண்டுநீர்
நாணுதல் வேண்டா; நம்காந்தி கண்ட
கனவு பலிப்பதற்குக் கால்கோள் இதுவென்று
மனத்தில் நினைமின்; மன்னுபெரு நீர்த்துறையில்

† படைக்கண்ணால்—கொல்வது போன்ற கண்ணால் ‡முற்றிக் கிடக்கும்—மொய்த்துக்கிடக்கும், *தீக்கொழுந்துமேனி—சிவந்தமேனி.



எல்லா விலங்கும் ஏதும் பகையின்றிக்
கொல்லாமை போற்றிக் குளிர்நீர் அருந்துமெனக்
காந்தியார் கண்ட இராமராச் சியக்கனவின்
*ஏந்திதுவாம் என்றே எண்ணி உணர்ந்திடுமின்;
வண்டிகளால் †ஏதம் வருமதனால் எச்சரிக்கை
கொண்டு நடந்தால் காரைக் குடிநகரின்
நெஞ்சம் எனவிளங்கி நிற்கும் இடம்காண்பீர்;
கொஞ்சம் அயர்ந்தாலும் துன்பங் குறுகிவிடும்;
கல்லுக் கட்டியென அழைக்கும் கடைத்தெருவில்
பல்லுக் கட்டியரின் விளம்பரங்கள் பார்த்திடலாம்;
‡குற்றியா? மகனா? அறியாது குழம்புகின்ற
பெற்றங்கள் வந்துரசும்; பேசும் இலக்கணத்தைக்
கற்றறிந்த பெற்றமவை; கல்போல நிற்பீரேல்
குற்றியே எனஉம்மைக் குறிக்கொள்ளும்; அம்மட்டோ
முற்றுந் தினவை முறித்திடற் கும்மேலே
சற்றே உராய்ந்து தள்ளிவிடும்; ஆதலினால்
‡‡வழக்கறா வீதி வளையாது சென்று
கிழக்கே திரும்புவிரேல் கண்டாரைக் கிளர்விக்கும்
பழக்கடைகள் பார்ப்பீர்கள்; பதமாய் இருக்கையிலே
மேலேறி அமர்ந்தபழம் மேற்றோலில் அழுகல்வரின்
கீழிறக்கப் பட்டுவிடும்; கிடக்கின்ற அப்பழத்தைத்
தூக்கி எறிவார்கள்; தொடரும் எருதுபன்றி
தாக்கிநின் றப்பழத்தைத் தாம்கொள்ளப் போராடும்;
அவற்றிற் கிடையில் அகப்பட்டுக் கொள்வீரேல்
துவட்டிவிடும்; ஆதலினால் தூர விலகிடுவீர்;
பனியிற் சறுக்குகின்றார் மேனாட்டார் பார்த்தறியீர்;

*ஏந்து—காரணம். †ஏதம்—துன்பம். ‡குற்றியா?—நடபட்ட கம்பமா? பெற்றம்—மாடு. ‡‡வழக்கறா வீதி—மக்கள் நடமாட்டம் நீங்காத வீதி.

கனியிற் சறுக்கியிங்கு விளையாடக் காண்பீர்கள்;
வாழைப் பழத்தோலில் வழுக்கிவிளை யாடுகின்ற
ஆளைநீர் காணின் வியப்பொன்றும் அடையாதீர்;
பனிக்கட்டி நமக்கேது? பழுத்துக் கசிந்த
கனித்தோல்தான் நம்தெருவில் காணக் கிடைத்திருக்கும்
இருப்பதை வைத்தே எதையும் முடிப்பதுதான்
பொறுப்புள்ள தேசியம் என்று புலங்கொள்வீர்.
ஒருவழிப் பாதையிலே எதிரில் மிதிவண்டி
வருவதுமேன்? என்றெண்ணி மயக்கத்தா லெம்மை
ஆவலாய் நோக்காதீர்; அவர்வேறு யாருமல்லர்;
காவல் துறையினர்தாம்; ஆதலினால் தவறில்லை;
வண்ண உடையணிந்து வகைவகையா நூற்கட்டை
நண்ணிச் சுமந்து சிறுவர் நடப்பார்கள்;
நெஞ்சிற் சுமக்காது நீள்கின்ற கைகளிலே
பிஞ்சு சுமத்தல் பெரும்பாரம் என்பீர்கள்;
சுவையை அறிபவர்கள் சுமையும் அறிவதற்கு
நவையிலார் செய்த நன்மையென ஓர்ந்திடுவீர்;
வாருங்கள்! வாருங்கள்! என்றே வரவேற்றுப்
பாருங்கள்! பாருங்கள்! என்று துணிபரப்பும்
*அறுவைக் கடைக்காரர் அறுவையினைத் தாண்டி
வருவீரேல் கோபுரந்தான் வானத்தைத் தொடுகின்ற
கொப்புடை யம்மன் திருக்கோயில் குறுகிடுவீர்.
அப்பெரும் கோயில் அகத்தினிலே தேவர்களின்
தேசிய மொழியாத் திகழ்சஞ்சக் கிருதத்தில்
பேசுவதே இறைவிக்குப் பேருவப்பாம் என்றுசொலிக்
காசு பறிப்பாரேல் உடன்பாடு காட்டாதீர்;

*அறுவைக்கடைக்காரர்— துணிக்கடைக்காரர்.



தேசு மிகுந்தமிழில் அருச்சனை தேவையெனக்
கேட்பீர் அழகு கிளர்தமிழ்ச் சொல்செவியில்
‡தோட்குந் தொறுங்கண்ணில்துளிர்க்கின்றகண்ணீரால்
இறைவி திருத்தாளை நீராட்டி இதயத்தில்
குறையாத நல்லின்பம் கொண்டு திரும்புதிரேல்
'காலத்தைப் போற்று'கெனக் காட்டுமொரு வாசகத்தை
ஞாலத் தவர்க்குரைக்கும் மணிக்கூண்டு நனிகாண்பீர்;
மூலத்தைக் கண்டீர்! கீழ்த்திசையில் முன்னடந்தால்
காலத்தால் வந்த உரைகாரர் காண்பீர்கள்;
கரையில்லா அன்புடையீர்! கவனமாக் கேட்பீர்!
உரைகாரர் என்றவுடன் உச்சிமேற் புலவர்கொளும்
நச்சினார்க் கினியனையோ அடியார்க்கு நல்லனையோ
மெச்சும் புலமை மிகுந்த அரையனையோ
பரிமேல் அழகனையோ எண்ணிநீர் பாராதீர்;
உரிய நகைவிற்க ஒருவர் வருவாரேல்
முழுத்தகுதி காண முன்னினராய் உரைகல்லில்
அழுத்தி உரைக்கும் உரைகாரர் அங்குண்டு;
*காண்டிகை என்று கல்லில் உரைப்பார்கள்
வேண்டி மறுபடியும் †விருத்தி யுரையுரைப்பார்;
உரைகாரர் ஆசை உளங்கண்டு சிரித்தவராய்
விரைவீரேல் ஆங்கோர் விலக்குவரும்; வந்தவுடன்
தீ நாற்றம் பாய்ந்தும் மூக்கினைத் தீண்டிடுமேல்
‡‡ஆனூர்ந்தான்திருக்கோயில்ஊருணியை◡அண்மியதா
எண்ணுங்கள்; அந்த ஊருணியின் எழுநாற்றம்
விண்ணுக்கும் எட்டும் வீறுடைய தாயிருக்கும்;
குளத்தில் முழுகி எழுபவரைக் காணின்

‡ தோட்குந்தொறும்—துளைக்குந்தொறும் *காண்டிகை—காண்டி + கை—கையில் உள்ள கல்லைப் பாருங்கள் †விருத்தியுரை—விரிவான உரை, அவர் பொருள் வளம் பெருக உரைக்கும் உரை ‡‡ஆனூர்ந் தான் கோயில்—சிவன் கோயில். ◡அண்மியதா—நெருங்கியதாக. இவ் வூருணியின் நீர் கரும்பச்சை நிறமாக இருக்கும்.

நிறத்தில் திருமாலை நினைவிற் கொணர்வார்கள்;
இடமிருந்து வலமாக ஏகுதிரேல் ஆடவர்கள்
மடமகலக் கல்வி மருந்து தனையளிக்கும்
உயர்பள்ளி காண்பீர்கள்; காண்பீரேல் உட்செல்க;
செயிர்தீர் கவியரசன்; செந்தமிழப் பாவேந்தன்
குலத்துதித்த மூத்தமகன் கொள்கை பிறழ்தலிலான்;
நலமெல்லாம் தமிழுக்கே எனவாழும் நாவல்லான்;
பூங்கொடியின் தந்தை; பொன்னார்ந்த தமிழுக்குத்
தீங்கென்றால் வாள்தூக்கும் திண்தோள் முடியரசன்
ஆளும் பதியதுதான்; ஆதலினால் அவற்காணின்
நீளும் தமிழ்ச்சுவையில் நீவிர் திளைத்திருக்க
வைப்பான்; அவனை வணங்கிவரின் செங்கரும்பு
கைப்பத் தமிழ்சொல்லும் இராயசொ எனும்கவிதைக்
கடலிருந்த மாளிகையைக் காண்பீர்கள்; அக்கடலைத்
†திடல்விழுங்கிப்போனதனால் வெறுமைதிகழ்ந்திருக்கும்
மூவர்தம் பாட்டும் மூவாநா லாயிரமும்
கோவையொடு வாசகமும் கொஞ்சிக் குலவிவர
கம்பன் கவியைக் கண்ணன் கதைநடத்தும்
வம்புசேர் பாரதத்தின் வளமார்ந்த பாடல்களைச்
சேக்கிழார் தந்த செழிய தமிழ்க்கவியை
வாக்கினால் அள்ளி வழங்கும் கடலிருந்த
புண்ணியக் கோயிலினைப் போய்க்கண்டு மீள்வீரேல்
நண்ணுவீர் தமிழ்ச்சங்கம் நடத்தும் விழாவரங்கை;
அவ்வரங்கில் *மாணிக்க அறிஞன் வரவேற்பான்;
‡செவ்விய காவியுளே சிறுத்தையொன்று வந்திருக்கும்
கவியரங்கம் கேட்டிடலாம்; கருத்துக் குவியலினைச்

†திடல்—சுடுகாடு; *மாணிக்க அறிஞன்—வ.சு.ப. மாணிக்கனார்.
‡செவ்விய காவியுள் வந்த சிறுத்தை—குன்றக்குடி அடிகளார்.



செவியரங்கில் ஏற்றிச் சிந்தை நிறைந்திடலாம்;
*முத்தமிழ்க் காவலரும் முறையாகப் ‡பண்ணாய்ந்த
வித்தகரும் மற்றுமுள வீறுதமி ழாய்ந்தாரும்
சங்கப் புலவோர்தம் சால்பெடுத்துக் கூறிடுவார்;
தங்கத்தாற் செய்தெடுத்த வள்ளம் தனில்தருமோர்
கன்னல் அமுதத்தைக் காதாற் பருகிமன
இன்னல் தவிர்ந்திடுவீர்! இன்பம் பெருகிடுவீர்!
அன்பர் தரும்உரைகள் கேட்டே அறிவுநலம்
என்போலும் கொள்வீர் இனிது.

*முத்தமிழ்க்காவலர்—திரு.கி.ஆ.பெ.விசுவநாதனார். ‡பண்ணாய்ந்த வித்தகர்—குடந்தை ப.சுந்தரேசனார்.

*மதுரை மாவட்டத் தமிழாசிரியர் கழகம் நடத்திய கவியரங்கில் பாடப்பட்டது.*

# 8 வாழை

கொல்லையில் கழிநீர் தேங்கும்
குட்டையில் வளர்வேன் என்றே
எள்ளுதல் புரிய வேண்டா;
இன்றுநான் உலக மக்கள்
கொள்பொருள்; ‡வெளிப்ப ணத்தைக்
கொணர்பொருள் ஆகி விட்டேன்;
சில்பொருள் வாழை என்று
செப்பிடல் பழைய காலம்.

செந்தமிழ் நாடு சென்றால்
சிறப்பினைப் பெறலா மென்று
வந்தேறி நிலைத்து விட்ட
வளர்கரும் பல்லேன்; நீரில்
முன்தோன்றும் உயிர்கள் தம்முள்
முன்றமுறை வளர்ந்து பெற்ற
சொந்தத்தை உடையேன்; என்றன்
தொன்மர பறிவீர் அன்றோ?

‡ வெளிப்பணம்—அன்னியச் செலாவணி.



இடத்தினைப் பெயர்த்து வைத்தால்
ஏற்றமாய் வளர்வேன்; வந்த
இடத்தினைச் சொந்தங் கொள்வேன்
அயலிலே இருப்பார்க் கெல்லாம்
கொடுப்பன கொடுப்பேன்; அன்று
‡பூங்குன்றக் கணியன் போட்ட,
தடத்தினை மறவேன்; யாரும்
தங்கேளிர் என்று கொள்வேன்.

பெரும்பசி தன்னைத் தீர்க்கப்
பிழையிலா உணவு மாவேன்
ஒருமலம் நீங்கா ரெல்லாம்
உணவொடு மருந்தாக் கொள்வர்;
பெறுமிவை அறிந்து கொண்ட
பேரறி வாள ரெல்லாம்
திருவொழி ○மும்ம லத்தைத்
தீர்க்கின்ற நெறியைப் பேணார்.

நல்விருந் தோம்பு வார்க்கு
நற்றுணை யாவோ மென்று
மெல்லிலை விரித்து வைப்பேன்
மேலெழும் காற்றுத் தீயோன்
அல்லலே செய்வான்; ஆட்டி
அசைத்திலை கிழித்துத் தீர்ப்பான்;
நல்லவற் றுள்ளும் தீயோர்
நலிவையே செய்வார் போலும்.

‡பூங்குன்றக் கணியன்—கணியன்பூங்குன்றன். *பூங்குன்றக் கணியன் போட்டதடம்—யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்னும் வழி.
○மும்மலம்—மூன்று குற்றங்கள்.

அடியினை முறித்துப் பூமி
    அகழ்ந்தென்றன் கிழங்கெ டுத்துக்
கடிமிள காயை உப்பைக்
    கலந்துணத் தெரிந்த மாந்தர்
‡தடியென வளரும் ஆசை
    *தடிந்துதன் னெஞ்சி னுள்ளே
கொடியெனப் படர்அ கந்தைக்
    கிழங்கினைக் கொல்லு கில்லார்.

தோலினை விதையை நீக்கிச்
    சுளையினைக் கொள்ளு வாரேல்
நாவிலே ஒருபா கத்தை
    நல்கிடும் கனிநா னல்லேன்;
‡‡கோலிய தோட்டத் துள்ளே
    சரிபாதி கேணி என்றால்
ㄷவாலிய அறிவின் மிக்கார்
    நகையினை வழங்கி டாரோ!

வண்டுகள் பூவில் மொய்க்கும்;
    வடையாகச் சுட்டு வைத்தால்
கண்டவர் கண்கள் மொய்க்கும்;
    கனிகளைக் காணின் மென்பூச்
செண்டுகள் அனைய பிள்ளைச்
    சேய்களும் மொய்க்கும்; வாழ்க்கை
உண்டெனின் 'மொய்க்க வாழும்'
    ஒன்றுக்கென் னிகர்யார் சொல்வீர்!

‡தடி—தடித்ததாக. *தடிந்து—நீக்கி. ‡‡கோலிய—எல்லையிட்ட
ㄷவாலிய—தூயதான.



காலத்தால் மலர்ந்து வீழ்ந்து
    கருகுவ சிலபூ; பெண்டிர்
கோலஞ்செய் முடியில் ஏறிக்
    குப்புற வீழ்வ சில்பூ;
ஞாலத்தில் என்பூ வொன்றே
    நல்லுணாக் கறியா மாறும்,
சீலத்தைப் பெற்ற தெண்ணிச்
    சிந்தையுட் குளிர்ச்சி கொள்வேன்.

பின்வரு வாருக் கெல்லாம்
    பெருவாழ்வு தருதல் வேண்டி
என்னிடம் காலி செய்வேன்;
    இஃதென்றன் குறிக்கோ ளாகும்;
இன்னுமோர் ஆண்டுக் காலம்
    என்பணி நீட்டிப் பீரென்று
உன்னியோர் வேண்டு கோளை
    அனுப்பிட உவந்தி லேன்யான்.

பலமுறை ‡கருவு யிர்த்துப்
    பத்துக்கு மேலாம் பிள்ளை
பொல பொல வென்றே ஈன்று
    நலமெலாம் பொன்ற வாழேன்;
நலமுற ஒருமு றைதான்
    நான்கருக் கொள்வேன்! இந்தக்
குலமுறை ஒழுக்கம் என்றன்
    உயிரினும் மேலாக் கொள்வேன்.

‡கருவுயிர்த்தல்—பிள்ளை பெறுதல்,

*காரில்தான் ஈனும்; கூதிர்க்
காலத்தே ஈனும்; இந்தப்
பாரிலே செடிகள் ஒவ்வோர்
பருவத்து மட்டும் ஈனும்;
ஊரிலே நான்மட் டுந்தான்
உங்களைப் போலக் காலம்
ஆறினும் ஈன்றி ருப்பேன்;
தென்னைஎன் அண்ண னாவான்.

வாளைத்தான் உறையின் நீக்கி
வைத்தாற்போல் விளங்கும் †தண்டைத்
தோளுக்கு வேற்கண் மாதர்
துடைக்குத்தான் உவமை சொன்னார்;
பாளைப்பல் வரிசைப் பெண்டிர்
கருங்குழல் ‡பணைத் தோள்வீழ
வாழைப்பூக் கொண்டை போட
வடிவம் நான் கொடுத்த தன்றோ?

திருமண வீட்டு வாயில்
தெருவிலே வருக என்பேன்;
நறுமண மாலை யில்நான்;
நாராக இணைத்தி ருப்பேன்;
உறுமணம் கமழச் செய்த
உண்டியுள் பொரியல் கூட்டாய்
பெருமணம் செய்தி ருப்பேன்
பந்தியுள் இலையு மாவேன்.

*காரில்—கார்காலத்தில். †தண்டை—வாழைத் தண்டை ‡பணைத் தோள்—திரண்டதோள்.



பந்தியுள் *இனிய கூழைப்
பருகிடத் தொன்னை யும்நான்;
வந்தவர் விடைகொள் ளுங்கால்
வழங்கிடப் பழமாய் நிற்பேன்;
இந்தஇப் பிறவி எல்லாம்
மானிடர் தமக்கே ஈந்தேன்
அந்தோநீ ‡அளியன் என்றே
இரங்குவார் ஆரும் காணேன்.

இலைமுதற் கிழங்கீ றாக
எத்தனைப் பொருள்கொ டுத்தேன்;
விலைமுதற் பொருளாய் மாறி
வேண்டிய நலங்கள் சேர்த்தேன்;
கலைதெளி மாந்தர் நன்றி
சிறிதேனும் காட்டா ரயென்
(குலையினை அறுக்கின் றாரே
கொடுமையை என்ன சொல்வேன்.

இலையினைக் கேட்பார்; பின்னர்
இன்கனி பறிப்பார்; வண்ணச்
சிலையெனத் தெருவில் வைப்பார்;
திருமணம் முடிந்து விட்டால்
துலையிலாத் ‡‡துரியன் தம்பி
துரோபதை துகிலை வாங்கும்
நிலையென உரிவார்; நானோ
நாணத்தால் வெளுத்துப் போவேன்.

*இனிய கூழ்—பாயசம் ‡அளியன்—இரங்கத்தக்கவன் (குலையினை—வாழைக்குலையை, ஈரற்குலை என்ற பொருளும் தோன்றுகின்றது.
‡‡துரியன்தம்பி—துரியோதனின் தம்பி துச்சாதனன்.

நைந்தளப் பொருளும் மாந்தர்
நயப்பினை இழப்ப தல்லால்
உய்ந்திடல் இல்லை; தோலும்
உள்ளுறை பழமும் ஒன்றாய்
நைந்துநைந் துழன்ற போதும்
யாவரும் விரும்பும் கோயில்
*ஐந்தமு துருவம் கொள்வேன்;
யாரெனை வெறுப்பார் சொல்வீர்;

ஓவியத் தெழுதிப் பார்த்த
தொன்றலால் உண்டு பார்க்கா
சோவியத்து மக்கள் என்மேல்
சொல்லொணாக் காதல் கொண்டார்;
காவியப் புலவோ ரெல்லாம்
கனிமூன்றில் ஒன்றா வைத்தார்;
ஏவிய வான ஊர்தி
ஏறிடும் வாழ்வும் பெற்றேன்.

சிறுமலை கிழவோன் உண்டு;
செவ்வாழை மேலோன் உண்டு;
0குறுமதிப் பேயன் உண்டு;
கொள்பச்சை நாடான் உண்டு;
‡குருவொளிர் பூவன் உண்டு;
குமரிநேந் திரனும் உண்டு;
பெருகிய சாதி யாலே
பிளவுகள் எமக்கும் உண்டு.

*ஐந்தமுதுருவம்—பஞ்சாமிர்தம் என்னும் உருவத்தை. 0குறுமதி—குறைந்த விலை மதிப்புடைய. ‡குருவொளிர்—புள்ளிகளையுடைய



சாதியை விட்டு வேறோர்
சாதியில் மணங்கொள் ளாத
ஆதிநாள் வழக்க மெல்லாம்
அடியோடு விட்டு விட்டோம்;
‡போதினால் மணக்க லப்பைப்
புகுத்தினர்; ஏற்றுக் கொண்டோம்;
நீதியாற் *பொற்ப தக்கம்
வழங்கிட நினைத்தா ருண்டா?

சிவப்புமுக் கோணக் காட்சி
தெருவெங்கும் விளங்கக் கண்டீர்;
உவப்புற ஒன்றின் மேலோர்
கருக்கொள ஒருப்ப டாத
தவப்பெருஞ் சிறப்பை எண்ணித்
தந்தாரா ‘பதும பூடன்;
‡‡அவமுற்றேன் இந்தி யாவின்
அரசுசொற் கடைப்பி டித்தே.

உரியஇந் நாள் வரைக்கும்
உள்நாட்டில் உரிமை பெற்றேன்;
†மொரிசெனும் பெயரைக் கொண்ட
குள்ளியால் முன்பு பெற்ற
**வரிசையை இழந்து விட்டேன்;
வந்தேறி யால்எப் போதும்
உரியவர் உரிமை குன்றல்
உலகத்தின் வழக்கம் போலும்.

‡ போதினால்—மலரைக் கொண்டு. *பொற்பதக்கம்—கலப்பு மணத்தம்பதியர்க்குத் தமிழக அரசு தங்கப்பதக்கம் வழங்குகின்றது. ‘பதுமபூடன்—இந்திய அரசு வழங்கும் ‘பத்மபூஷண்’ விருது. ‡‡அவமுற்றேன்—பெருமை இழந்தேன். †மொரிசெனும்...குள்ளி—மோரீசு வாழை என்னும் குட்டை வாழை. **வரிசை—மரியாதை.

வஞ்சியர் தமக்குக் கண்ணில்
வடிந்திடும் ஈரம்; மாவின்
பிஞ்சினைக் காண்பார்க் கெல்லாம்
பெருகிடும் நாவில் ஈரம்;
எஞ்சாது மேனி யெங்கும்
ஈரமே கசிந்த தாலே
‡துஞ்சுவேன் பிறருக் காகத்
தூயநல் ஈகை மிக்கேன்.

‡ துஞ்சுவேன்—இறப்பேன்.

*காரைக்குடி இந்துமதாபிமான சங்கம் நடத்திய பாரதிவிழாவில் பாடப் பெற்றது.*

# பாரதி பாடிய தெய்வம் :சிவன்

மூலத்தை, ஞான முதலை, உலகுய்ய
†ஆலத்தை உண்ட அமுதத்தை, ஊர்ப்புறத்துக்
காடேறி நின்றாடும் கண்ணுதலை, நன்னெஞ்சின்
மோடேறி வந்தருளும் மாமணியைப் பாரதியார்
சொன்ன பரிசே துலக்கிக் கவிபாட
உன்னினேன்; என்றாலும் உள்ளம் தளர்ந்ததலால்
கவிதை வரவில்லை ;கற்பனைகள் நீளவில்லை;
புவிக்கெல்லாம் மூலத்தைப் போய்ப்பார்த் துரையாடி
வந்தால் கவிதை வருமென்ற எண்ணத்தால்
செந்தழல் வண்ணச் சிவனையான் காணுதற்கு
ஞானத்தேர் ஏறினேன்; நான்கு திசையளந்தேன்;
*ஊனத்தை யல்லால் உண்மையினைக் காணவில்லை.

† ஆலம்—விடம். மோடேறி—அருகில் ஏறி. *ஊனம்—குற்றம்.

எங்கே இருப்பாரோ எனஉந்தும் ஆசையினால்
கண்கள் இமையேனாய்க் காட்சிகளைக் கண்டுசென்றேன்;

கற்றைச் சடையும் கையில் அனலுமாய்
ஒற்றை மனித உருவிற் சிவன்வருவான்
என்றெண்ணிச் சென்றேன்; எதிரில் ஒரு கூட்டம்
பொன்திகழும் செஞ்சடையும் கையிற் புகையனலும்
தாங்கி வரக்கண்டு தாவில் சிவக்கூட்டம்
ஆமிதென் றெண்ணி அருகணைந்தேன்; ஐயகோ!
எண்ணெய் தலைத்தடவா இந்நாட்டு வாலிபர்கள்
வெண்சுருட்டில் தீவைத்துக் கையின் விரலிடுக்கில்
எடுத்துவந்தார்கள் ஐயோநான் ஏமாந்தேன்;
அடுத்துச் சிவனை அடையும் வழி என்ன?
எவனுக்கும் எப்பொருட்கும் போலி இயற்றுபவர்
சிவனுக்கும் போலி செய்தனரே என் செய்வேன்.
குறைமதியைத் தாங்கியவன் என்றுநான் குறிக்கொண்டால்

குறைமதியர் எல்லாரும் சிவனென்று குதிப்பாரே!
பாதிபெண் ணானான் படிவத்தை நினைவேனேல்
பாதியிலே பெண்ணானார் மருட்கைப் படுத்துவரே!
சூல மழுத் தாங்கும் தோற்றத்தை நானினைந்தால்
ஞாலத்தில் கொலைஞர்களும் நான்சிவனென்றெழுவாரே!

*விடையேறும் தோற்றத்தை விழியில் நிறுத்துவனேல்
விடையேறிச் சிறுபிளைகள் விளையாடி வருவாரே!
கண்டங் கருத்த காட்சியினை நான் நினையின்
†முண்டங் கருத்தானும் சிவனென்று முன்வருமே!
‡நச்சுண்டு வாழும் நலச்சிறப்பை எண்ணுவனேல்
Oநச்சுண்டு வாழ்பவரும் நான்சிவனென் றுரைப்பாரே!

---

* விடை—மாடு. †முண்டம்—தலை நீங்கிய உடற்பகுதி. ‡ நச்சுண்டு நஞ்சுஉண்டு. O நச்சுண்டு—எதையும் நையச் செய் உண்டு(பல்லில்லாதார் உண்பது)



மெய்த்தேகம் வெண்ணீற்றால் விளங்குமென நினையின்
‡சித்தனா தன்நீறால் சிவனானார் மிகவுண்டே!
Oஇரக்க வருவான் எனஎண்ணித் தேடுவனேல்
இரக்கவரு வாரெல்லாம் சிவனென்றால் என்செய்வேன்;
தலையில் மனையாளைத் தாங்குவான் எனத்தேடின்
தலையில் மனையாளைத் தாங்காதார் யாருளரே!
புலித்தோல் உடுத்துப் பொலிவான் எனத்தேடின்
புலித்தோலின் வண்ணம் பொலியும் உடையுடுத்து
ஆடவர் பெண்டிர் அனைவருமே திகழ்நாளில்
தேடிச் சிவனை எவ்வண்ணம் தேர்ந்தறிவேன்;
நாமிருவர் வாழ்வில் நமக்கிருவர் தத்துவத்தால்
*ஆமருவி யானை அடையாளம் தேறுதற்கும்
இயலா வகையில் இந்நாளை அரசாங்கம்
செயலாக்கும் †கு.க. திட்டத்தால் சிவனார்கள்
நாடெங்கும் பரவியுள்ளார்; எவ்வண்ணம் நான் தெரிவேன்;

‡‡மாடெங்கும் தேடி மனஞ்சலித்த வேளையிலே
அயலவரை ஓட்ட அணுகுண்டுச் சொல்லெடுத்துப்
புயற்பாட் டிசைத்த புத்துலகப் பாமன்னன்
பாரதியார் என்முன் வரக்கண்டு பணிவுடனே
காரெதிர் கொண்ட மயிலாய்க் களித்துநின்றேன்;
ஞான ரதமேறி நாடெல்லாம் சுற்றிநீ
காண விழைந்தது பாண்டியா கழறுகென்ன
நின்னாலே வந்த நெடிய துயரத்தை
அண்ணால்நீ தானே அகற்றுதல் வேண்டுமென்றேன்;
துன்பமென்ன நானுனக்குத் தோற்றுவித்தேன் எனக்கேட்க
அன்புமன்னும் தெய்வத்தை அன்றுநீ பாடிவைக்க,

---

‡ சித்தனாதன் நீறு—பழனியில் உள்ள சித்தனாதன் கடையில் விற்கும் திருநீறு. Oஇரக்க—பிச்சை எடுக்க. *ஆமருவியானை—சிவனை † கு.க.திட்டம்—குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம். ‡‡மாடெங்கும்—அருகில் எங்கும்.

அவற்றைத் தலைப்பாக ஆக்கியுள்ளார்; என்றனுக்கோ
சிவத்தைக் கொடுத்துள்ளார் செய்வ தறியகிலேன்;
ஆதலின் நீதான் அரிய சிவப்பெருமை
காதலின் மிக்காய் கழறு கெனக்கேட்டேன்.
விடுதலைப் பண்ணிசைத்த வீரத் திருவாயால்
கடுவுண்ட கண்டன் பெருமை கழறலுற்றான்;
வெற்பெல்லாம் சிவலிங்கம்; வீழும் அருவியவன்
†அற்புள்ளம் காட்டும் அடையாளப் பெருக்காகும்.
வாய்திறந்த பூவெல்லாம் வள்ளல் அவன்புகழைத்
தூய்மணத்துச் சொல்லாலே துதிக்கும் புலவர்களே!
மேகத்தி லேறி விரும்பும் உயிர்க்குலத்தின்
தாகத்தைத் தீர்க்கத் தண்ணீரைக் கொடுவருவான்;
அனலாய்ச் சுடுவான்; ‡அனிலமாய்ச் சுற்றிடுவான்;
*இணருள் மணமாகி எங்கும் பரந்திருப்பான்;
நுண்ணோக்கி கொண்டும் நுணித்தறிய முடியாத
சின்ன உடலுள்ளும் தங்கிச் சிரித்திருப்பான்;
கொண்டலக் கருவியினும் குறித்தறிய முடியாத
அண்டவெளி யாயும் அவனுடலம் காட்டுகிறான்;
எண்ணியலில் வல்லாரும் வயதித் தனைஎன்று
○பன்ன முடியாத பழைமைச் சிறப்புடையான்;
கோடியினும் கோடி கருக்கொண்டு பெற்றாலும்
நாடி நரம்பு தளராத நல்லிளைஞன்.
வான்புனலில் ஆடி நிமிர்ந்து வருவானேல்
தேன்கொன்றைச் செஞ்சடையின்ஒழுகும் சிறுபுனல்தான்
கங்கையென்றும் பொன்னியென்றும் கடுகிவரும்
நைல்என்றும்
பொங்கிவரும் ரைன்என்றும் பொன்விளைக்கும்
தேம்சென்றும்.

† அற்புள்ளம்—அன்புள்ளம். ‡அனிலமாய்—காற்றாகி. *இணருள்—பூங்கொத்துள். ○பன்ன—சொல்ல.



சோற்றுத் துயர்போக்க உணவெலாம் தோற்றுவிக்கும்
ஆற்றுப் பெயரான் அழைக்கப் படுகிறது;
பாதம் பதியஅவன் நடந்த பதியெல்லாம்
நீநிலாப் பொற் சுரங்கம் ஆகிச் செறிந்திருக்கும்;
நெற்றிக்கண் சென்று நிலைத்த இடமெல்லாம்
சுற்றி நிலக்கரியாய் மாறித் துதைந்திருக்கும்;
ஒருபாதி சிவப்பாக மறுபாதி கருப்பாக
உருவாகி அவன் நிற்கும் உண்மை அறிவாயா?
சுற்றிவரும் பூமி மேல் ஞாயிற்றின் ஒளிபடுங்கால்
உற்றுநீ நோக்கின் ஒருபாதி ஒளியாக
எஞ்சிய பாதி இருளாகக் கண்டிடுவாய்;
அஞ்சுஞ் செறிந்த உலகவனே எனக்காட்ட
இருவண்ண உருவாகச் சிவனை எழுதிவைத்தார்;
ஒருவண்ண மாநீ உன்னுவையேற் கண்டுகொள்வாய்
பற்றை வளர்த்துப் பற்றறுக்கும் சீர்த்தியினால்
‡நச்சை முறிக்கின்ற நஞ்சாக விளங்குகிறான்;
மற்றிதனைக் கண்டார் மலமற்றார் துன்பமற்றார்;
பற்றிதனைக் கொண்டார் பயனனைத்தும் கொண்டாரே
யாண்டுமிந்த இன்பவெள்ளம் என்றும் நின்னுள்
வீழ்வதற்கே
வேண்டு முபாயம் மிகவுமெளி தாகுமடா!
எண்ணமிட்டா லே போதும்; எண்ணுவதே இவ்வின்பத்
தண்ணமுதை உள்ளே ததும்பப் புரியுமடா!
யாதுமாம் ஈசவெள்ளம் என்னுள் நிரம்பியதென்
றோதுவதே போதுமதை உள்ளுவதே போதுமடா!
காவித் துணிவேண்டா! கற்றைச் சடைவேண்டா!
பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே!

‡ நச்சை—நஞ்சை

**சாத்திரங்கள் வேண்டா; சதுமறைகள் ஏதுமில்லை**
**தோத்திரங்கள் இல்லைஉளந் தொட்டுநின்றாற்**
**போதுமடா!**

**சந்ததமும் எங்குமெலாம் தானாகி நின்றசிவம்**
**வந்தெனுளே பாயுதென்று வாய்சொன்னாற்போதுமடா.**
**மகம்மது நபிக்கு மறையருள் செய்தவன்காண்**
**திகழ்கின்ற பாற்கடலில் திகழ்ந்தானும் இவனேகாண்!**
**ஏசுவை ஈன்றானும் இவனேகாண்; பன்னெறிக்கும்**
**ஆசாகி நின்ற அரிய பரம்பொருள்காண்'**
என்றுரைத்தான் நானோ இருகையும் தலையேற்றி
நின்று தொழுது நீயுரைத்த தத்துவங்கள்
நன்றால்; எனினும் நயனங்கள் களிகொள்ளக்
கொன்றை யணிந்தாடும் கூத்தன் திருவுருவை
நான்காணக் காட்டுவையேல் உள்ளத்து நலிவகலும்;
தேன்காணும் செஞ்சொல்லாய்! சிறிதிரக்கம்காட்டென்று
இரந்தேன்; அவனும் இரங்கிப்பின் வாவென்று
பறந்தான்; பறந்தேன்; பரமன் எதிர்வந்தோம்;
கண்டு தொழுதேம்; கண்ணிரண்டும் வாயாக
உண்டு மகிழ்ந்தோம் அவன்றன் ஒளிவடிவை;
ஆசிரியப் பணிசெய்யும் அன்பனிவன் நினைக்காணும்
ஆசையினால் வந்தான் எனப்பா ரதியறைய
'காண விழைந்த கருத்தென்ன?' எனப்பரமன்
தேனாறும் சொல்லால் தெரிக்க நினைக்கண்டு
வணங்கிச் சிலவாய வார்த்தை உரையாடி
இணங்கிநீ சொன்னவற்றை உலகிற் கெடுத்தோத
மனங்கொண்டு வந்தேன் மறைகாணாப்
பெரும்பொருளே!
இனங்கண்டு விருப்பத்தை ஏற்றருள் கென்றவுடன்.



நாளிதழ்க்குச் செய்தி நாடோறும் திரட்டுகின்ற
ஆசிரியன் ஆமாயின் அகன்றுவிடு இப்பொழுதே;
தூணைத் துரும்பாக்கித் துரும்புகளை வானாக்கி
ஆணையும் பெண்ணாக ஆக்குவதில் வல்லீர்நீர்;
செய்தி திரிக்கும் சீலமிலிக் கெந்நாளும்
உய்தியில் என்றோர் புதிய அறம் உலகில்
எழுத ஒருபுலவன் இன்றைக்குத் தேவையன்றே!
பழுது செயும் பத்திரிகை ஆசிரியப் பயலாயின்
முன்னிற்க வேண்டா எனச் சொல்லி மூச்சுவிடப்
பொன்னிற்கும் மேனியாய்; புரைவளர்க்கும்
தாளிகையின்
ஆசிரியன் அல்லேன்; அன்னைத் தமிழ் பயிற்றும்
ஆசிரியன் நான்என்றேன்; அகத்தில் மகிழ்ச்சிகொண்டு
அவ்வண்ண மாயின் ஆகட்டும் கேள் என்றார்;
செவ்வண்ண வேணியாய்! ஆறறிவு செழித்துள்ள
இந்நாளை மாந்தன் இயல்பினை எவ்வண்ணம்
உன்னினையோ அவ்வண்ணம் உரைஎன்றேன்;
கேட்டவுடன்
அறிவு செழித்ததென் றென்முன் அளந்தவனே!
அறிவு செழித்ததல்லால் அறிவு செழித்ததுண்டோ?
மாற்றார் துயரைத் தன்துயரா மனக்கொளலைப்
போற்றாரை எங்ஙன் அறிவர் எனப்புகலல்?
தன்னை அறிந்தனரா? தாவில் வழிகொள்ள
என்னை அறிந்தனரா? ஏதும் அறிந்திலரே!
கள்ளநோட் டாளர், கடத்தல் திமிங்கிலங்கள்,
பள்ளம் பிறர்க்கும் பறிக்கும் திறனுடையார்
தம்வேலை வெற்றி தரவேண்டும் எனவேண்டி
எம்மைக் குளிர்விக்க அபிடேகம் இயற்றுகின்றார்;

நான்படைத்த மானிடர்கள் நன்னெறியை நாடாராய்த்
தான்படைத்த இலஞ்சத்தை எனக்கே தரவந்தார்;
ஆணவ ஓட்டை அடித்து நொறுக்கியுளங்
காணுக வெள்ளையெனக் காட்டுவார் என்றிருந்தேன்;
தேங்காயை வாங்கி ஓட்டைச் சிதறடித்துப்
பாங்கான வெண்மையிது பாரென்று காட்டிவிட்டார்;
பாசமெனும் தோலை உரித்துப் பழுத்தஉயர்
நேசங் கனிந்திருக்கும் நெஞ்சினைக் காட்டாராய்,
இனிய பழம்வாங்கித் தோலை உரித்தெடுத்துக்
கனிந்தது காணென்று காட்டி முடித்துவிட்டார்;
என்பும் பிறருக்கே எனச்சொல்லும் நன்னெறியில்
அன்புடைய ராவார் எனநான் அகங்கொண்டேன்;
சூடத்தை ஏற்றிச் சுடர்வத்தி கொளுத்தியபின்
தேடரிய அன்பினையும் தீயில் கொளுத்திவிட்டார்;
என்னையும் மாந்தன் ஏமாற்றக் கற்றுவிட்டான்;
அன்னை யறியாத சூலொன்றும் ஆவதுண்டோ?
மனிதன் திருந்தி மயலொழிப்பான் என்றல்
இனியெனக் கில்லை எனப்பரமன் நிறுத்துகையில்
ஒருபிள்ளை உயர்வென்றும் மறுபிள்ளை தாழ்வென்றும்
திருநீயே செய்வாயேல் பேதம் செழிக்காதோ?
ஒருசாதி உயர்வென்றும் உன்னைத் தொடும்உரிமை
மறுசாதிக் கிலைஎன்றும் மறுத்தல் புரிவாயேல்
தந்தை மகனென்ற உறவு தழைத்திடுமோ?
என்றேன் சிவனார் இருவிழியிற் சிவப்பேற
நந்தனைத் தில்லை நகர்வாழும் அந்தணர்கள்
வந்து வணங்குவணம் வைத்த எனைக்கூட



தம்பாமல் இவ்வண்ணம் நவிலல் முறையன்று;
கங்கைக் கரையிருக்கும் காசித்திரு நகரில்
வந்தென்னை எல்லாரும் தொட்டு வணங்குவதை
அங்குவந்து காணுவையேல் அறியாமை நீபுகலாய்;
நெஞ்சம் உருகி நினைவெல்லாம் நானாக
அஞ்சு பொறியும் என்பால தேயாக்கித்
தொட்டு வணங்கத் தூமலர்கள் என்னடியில்
இட்டு வணங்க யார்க்கும் மறுத்ததில்லை;
பேதப் படுத்திப் பெருவயிறு வளர்ப்பவர்கள்
தீதுசெய் தார்அதனைத் தெரியாதே உழல்கின்றீர்!
மொழிந்தார் பரமன்; முகிழ்த்த களிவெள்ளம்
வழிந்தோட நின்று மற்றொன்று நான்கேட்டேன்;
சுந்தரன் வாயிசைத்த சொன்மாலைக் குருகியது
அந்தநாள் என்றும் ஆரியர் தம்மொழியால்
அருச்சித்தல் உயர்வென்றும்; அணிதமிழில்
அருச்சித்தால்
கருச்சிதைந்து போனாற்போல் கடவுள் வலிகுன்றும்;
திருக்கோயில் தேயும்; தீமை வருமென்றோர்
திருக்கூட்டத் தாரிங்கே செப்பித் திரிகின்றார்;
மெய்ம்மை யறியாதே மிரள்கின்றோம்; ஆதலினால்
பொய்ம்மை களைதல் புரிகென்றேன்; அன்புடையாய்!
எந்த மொழிக்கும் எதிரிநா னல்லேன்;
இந்தமொழியில்தான் எனைத்துதித்தல் வேண்டுமென்று
கூறும் குறுமதியை நான்என்றும் கொண்டதில்லை;
தேறும் அறிவுடையார் நன்கு தெளிவார்கள்;
எந்தமொழி யானாலும் யாரும் அவரவர்தம்
சொந்த மொழியில் துதிப்பதையே விரும்புகிறேன்;

ஆரியத்தில் அல்லா தயன்மொழியில் அருச்சித்தால்
வீரியத்தை நானிழப்பேன் என்று விளம்பலெலாம்
காரியத்தில் கண்ணானார் கட்டுக் கதையப்பா!
ஆரியத்தால் வன்மை அடைகின்றேன் நான்என்றால்
என்னின் வடமொழியே ஏற்ற முடைய தென
உன்னு பவர்தாம் அவ்வா றுரைக்கின்றார்;
ஒப்புக்கொள் வாரேல் உலகிறைவன் நானென்று
செப்புதல் பொய்ம்மைச் செய்தியலால் வேறில்லை;
என்றார் சிவனார் இதுவே சமயமென்று
ஒன்றின்னும் கேட்பேன் உரைக்க விடைஎன்றேன்;
இறைவா நீயுறையும் கோயிலில் எல்லாம்
மறையோதி அருச்சிக்க மனித குலத்திற்குள்
ஒருசாதி யார்க்கே உரிமையினை வேண்டுகின்றார்;
பெருமான்! இதுபற்றிப் பேசுதல் வேண்டுமென்றேன்;
ஒருசாதி யாரே அருச்சிக்கும் உரிமைபெறல்
பொருந்தாத தென்று புகல்கின்றார்; ஆனால் நான்
ஈடிலாக் கோயிலுளே யாரையுமே அருச்சகராய்ப்
போடுதலை வெறுக்கின்றேன்எனப்புகன்றார், திடுக்
கிட்டு

உமையாள் கணவ! விளக்கம் உரைக்கவென
அமைவாகக் கேள்என் றறைந்தார் சிவபெருமான்;
அருச்சகரால் நான்பட்ட அவதியோ கொஞ்சமன்று;
பெருச்சாளி உறைவிடமாத் திருக்கோயில்ஆக்கிவிட்டார்
மூக்கில் பொடிவைப்பார்; முன்னொழுகி வருசளியைப்
போக்க வழித்துத் தூண்மீது போட்டுவைப்பார்;
மீண்டும் சளிவந்தால் விரலால் வழித்தெறிவார்;
ஆண்டிருக்கும் என்மீதும் அப்போது வழிவதுண்டு;



கூறுகின்ற மந்திரத்தில் கொடிமார்க்குப்புகையிலைதான்
நாறுவதைத் தாங்காமல் நான்மயங்கிப் போவதுண்டு;
இவையிற்றால் மட்டும் அருச்சகரை எதிர்ப்பதா
நினையுறவே எண்ணாதே; நல்லதோர் காரணத்தை
இப்போது கூறுகிறேன்; என்னைத் துதிப்பவர்கள்
அன்புறும் நெஞ்சினராய் அருவிபொழி கண்ணினராய்
நெஞ்ச அழுக்கெல்லாம் நீங்கும் உணர்வினராய்
அஞ்செழுத் தோதி அருச்சிக்க விரும்புகிறேன்;
என்ன முயன்றாலும் அருச்சகரால் இவ்வுணர்வைப்
பண்ண முடியாது; பரிவும் பிறவாது;
தடையிலும் சிறுகுழவி தன்தாயை நண்ணுவதற்கு
இடையில் ஒருவன் எதற்காக? உணர்வற்ற
மந்திரங்கள் கூறி மரத்துவிடச் செய்கின்ற
எந்திர அருச்சகரை யான்விரும்ப ஒப்புகிலேன்;
அரசுக்கு நீதான் அணுக்கம் உடையவனேல்
விரைவாக இந்த அருச்சகர் வேலைகளை
ஒழிப்பதற்குச் சட்டம் இயற்ற உதவுகென்றார்;
கழியருளாய்! நின்பால் கழறுவ தொன்றுடையேன்;
தீமை தனையறிந்தும் தேட்டாளர் தமையறிந்தும்
ஊமை என இருத்தல் அழகாமோ? அன்னவரை
ஒறுத்துத் திருத்தல் உனதுகடன் என்றேனைப்
பொருத்தமாத் தண்டமொன்று புகல்கென்றார்; நான்
சொன்னேன்

அப்பரையும் பாண்டி அரசனையும் ஆட்கொள்ள
வெப்போடு சூலை வீசித் திருத்தினையே!
இன்றைக்குக் கொஞ்சம் இடர்ச்சூலை நோயவரைத்
துன்னும் படிசெய்யின் துடித்துத் திருந்துவரே!

எக்கால மானாலும் இந்தத் தவறுகளை
முக்காலும் செய்யார் எனநான் முடிக்கையிலே
ஆ! ஆ! ஆ! என்றே அதிர்ந்த சிரிப்பினராய்
வாகாக என் முதுகில் வைத்துவிட்டார் பாரதியார்;
துள்ளி எழுத்தேன் நான்; தூய சிவனாரோ
பள்ளுரைத்த பாட்டுப் பாரதியோ அங்கில்லை;
நின்று தெளிந்து நெடுங்கனவா நாம்கண்டோம்
என்று தெளிந்தேன் இனிது.

*கம்பம் நகரில் நடைபெற்ற கவியரங்கில் பாடியது.*

# சமுதாயவீதியில்: அதிகாரி

என்னைத் தெரியவில்லை! நான்தான் அதிகாரி!
கண்ணை உருட்டாமல் கையெடுத்து வணங்குங்கள்;
†அரசியல் வாதிகளின் அடிபற்றிப் பின்தொடர்ந்து
வருவதுதான் அதிகார வர்க்கமெனல் அறிவீரே?
சமுதாய வீதியிலே உம்மையெல்லாம் சந்திக்க
இருநூறு கல்தாண்டி எழுந்தருளி வந்துள்ளேன்;
*ஆண்டி நான் இன்றோ அதிகாரி வேடத்தைப்
பூண்டுளேன்; கொஞ்சம் பொறுத்தருள் வீராக!
அதிகக் கருப்பாய் உள்ளம் அமைந்ததனால்
‡அதிகாரி என்றே அழைத்தாரென் றெண்ணாதீர்.

---

* ஆண்டி—என்பெயர் பழனியாதலின் ஆண்டி எனப்படுகிறது.
‡ அதிகாரி—மிகுந்த கரிய நிறம் உடையவன். †எனக்குமுன் பாடியவர் தலைப்பு 'சமுதாயவீதியில் அரசியல் வாதிகள்' என்பதாகும்.

காரிஎன்றால் சனிஎன்பார்; அதிஎன்றால் பெரிதென்பார்
ஊரினையும் நாட்டினையும் பிடித்தாட்டி உலுக்குகின்ற
பெரிய சனியாய் நாங்கள் பிறங்குவதால்
உரிய முறையில் ஊரார் எமக்கிட்ட
காரணப் பெயரென்று கைகொட்டி மகிழாதீர்;
காரம் மிகுந்த சொல்லாற் கழறுதலே
வாடிக்கை யானதனால் வந்ததோ நானறியேன்;
வேடிக்கை என்னவென்றால் விரிநீர் உலகத்தில்
அதிகாரம் செய்யாதார் ஆர்தாம் இருக்கின்றார்?
நிதியால் வயதால் நிலையிற் குறைந்தவரை
அதிகாரம் பண்ணுவதில் இன்பம் அடைகின்றார்;
மதியால் உயர்ந்தீர்! மதித்தறிய மாட்டீரோ?
ஊருக்கு நன்மை ஓங்கச் செயல்படலில்
யாருக்கும் தாழோம் எனச்சொல்லி அயராமல்
உழைக்கின்ற கட்சிகளை உருப்பட ஒட்டாமல்
அழிக்கின்ற ஆற்றல் அடியேற்கு மிகவுண்டு;
* கட்டுத் தொகையைத் தேர்தல் களத்தினிலே
விட்டோட வைப்பதற்கு வேண்டுவன செயவல்லோம்;
அரசியல் வாதிகளும் அஞ்சி நடுங்கும்
பெருமை யுடையேம்; அரசியற் பேர்வழிகள்
ஐந்தாண்டுக் காலந்தான் அரசியலை நடத்துகிறார்;
‡ ஐந்தேழு வருடங்கள் நானன்றோ ஆளுகிறேன்;
நடிகர்களே அரசியல் நடத்த வரும்பொழுது
படித்தவர்கள், அதிகாரம் பண்ணத் தெரிந்தவர்கள்
நடத்தினால் என்ன நாடா முழுகிவிடும்?
O கடத்துவார் கூடக் களித்துத் திரிகின்றார்;

† காரம் மிகுந்தசொல் — மிகுந்தகாரம் + சொல் = அதிகாரச்சொல்
* கட்டுத்தொகை–தேர்தல் கட்டுத்தொகை ‡ஐந்தேழு–முப்பத்தைந்து.
O கடத்துவார்—கடத்தல் தொழில் செய்வார்.



‡பத்தியாய் ஓட்டை பலஇருந்தும் அமிழாத
இந்தியக் கப்பல் என்னாலா முழுகிவிடும்;
வருமான வரிவாங்கும் அதிகாரம் வாய்த்துள்ளோம்;
வருமானம் யாருக்கு? வாய்திறந்து கேளாதீர்;
ஒருவழிப் பாதையிலே எதிர்வழியில் வந்தாலும்,
இருட்டில் விளக்கின்றி ஈருருளி விட்டாலும்,
குடித்தாலும், தேங்காய்க் குடுமியிலே கஞ்சா
அடித்தாலும் நாட்டில் அமைதி உருவாக்கும்
சட்டத்தின் அதிகாரம் எம்மையே சார்ந்துளது;
எட்டுத் திசையினிலும் தீமை எழுந்திருக்க
மட்டும் விடமாட்டோம்; மனத்தில் நிறுத்துங்கள்;
ஏனை அமைதியெனும் இனிய பசுங்கிளியைப்
பூனையைப் போலப் பொறுப்பாக யார்காப்பார்?
ஈக்களே மொய்த்தாலும் இனியநீ லாம்பரியைத்
தூக்காகப் பாடிக் கொசுக்கள் சுழன்றாலும்
உண்ணுகின்ற பண்டங்கள் ஆக்க உகந்த இடம்
மண்ணுலகில் இதுபோல மற்றொன்று கிடைக்காது
எனக்கூறும் சான்றிதழை எழுதிக் கொடுத்து
மனிதர் சுகாதாரம் காக்க மனங்கொள்வோம்;
கிராமாதி காரிஎன்றன் ஆற்றல் கிளத்துபவர்
இராமா! எனவியந்து நாமம் செபிப்பார்கள்;
ஐந்து கொடுத்தால் அழித்தெழுத முடியாத
இந்தப் பிறப்பில் எடுத்துவந்த சாதியையே
மாற்றிக் கொடுக்கும் வல்லமை மிக்குள்ளோம்;
போற்ற மனம் இல்லெனினும் புரைசொல்லல்
வேண்டாமே!
சாதி ஒழிப்புச் சமரிலே வெற்றிகொண்டு
நீதியை நாட்டி நெடிய பணிசெய்வேன்

‡பத்தியாய்—வரிசையாய்

நாரதரைக் கண்ணால் யாருமே கண்டதில்லை;
ஆருமே காணாக் கிராமத்து நாரதராய்
அவதாரம் எடுத்துள்ளேன்; அடியேனின் லீலையின்முன்
எவள்தாரம் என்னும் நெறிமுறைகள் ஏதுமிலாப்
பிருந்தா வனக்கண்ணன் பெருலீலை தோற்றுவிடும்;
வருந்தாதீர் உங்கட்கோ முன்தலையில் வழுக்கைவரும்;
பின்னிருந்து முன்னோக்கி வழுக்கை பெருகுவது
எம்மவர்க்கே உரித்தாகும்; எதிர்பார்த்துப் பின்புறத்தில்
தலையைச்சொறிவதனால் நிலைகொண்டவழுக்கையிது;
கலையா இதனைக் கற்றவர்கள் மெத்தவுண்டு;
ஆடிக் கறப்பவற்றை ஆடிக் கறந்திடவும்
பாடிக் கறப்பவற்றைப் பாடிக் கறந்திடவும்
வல்லவராய் முற்பிறப்பில் வாழ்ந்திருப் போம் போலும்
இல்லையெனில் வைக்கோல் கன்றை எதிர்நிறுத்தி
பால்கறப் பதுபோல் பழுப்பு நிறமுடைய
தாள்காட்டிப் பச்சைத் தாள்கறக்க முடிந்திடுமா?
பணமொன்றும் வாங்கோம்; பரிந்துரையும் கேளோம்
குணமா இருப்போம்; கொள்கை வழிநடப்போம்—
என்றெல்லாம் பேசும் இலட்சியர்கள் எங்களுள்ளும்
இன்றும் இருக்கின்றார்; என்றாலும் அன்னவரைப்
பாராட்டி நீண்டதொரு பட்டம் வழங்கிச்
சீராட்டி மகிழச் சிறிதும் தயங்ககிலோம்;
'பொழைக்கத் தெரியாதான்' என்னும் புகழ்விருதை
வழங்கி மகிழ்வோம்; கைதட்டி வரவேற்போம்;
†'பிழைக்கத் தெரியாதார்' பிழைக்கத் தெரியாதார்'
தழைக்கும் புதுமொழியைத் தமிழுக்குத் தந்துள்ளோம்;

† பிழைக்கத் தெரியாதார்—பிழைசெய்யத் தெரியாதார், பிழைக்கும் வழியை அறியாதார்.



பயணப் படிகளொடு ஊதியப் பாக்கிகள்
தவறாது பெறுதற்கு நாங்களும்தான் தள்ளுகிறோம்;
உன்னைப்போல் மற்றவரை உள்ளத்தே நினைகென்று
பொன்னைப்போல் மொழிதந்தபுத்தன்வழிவாழுகிறோம்
மேலுள்ள அதிகாரி மிரட்டி உருட்டுவதும்
வாலில்லா நாயாகி வள்ளென்று பாய்வதுமாய்க்
கடித்துக் குதறிக் கனிமொழியால் அருச்சனைகள்
படித்து முடிப்பர்; பக்குவமாய் வாங்கியதை
ஒன்று குறையாமல் என்கீழ் உழைப்பவர்க்குத்
தந்து மகிழ்வேன்; 'தாம்பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்' என்னும் பெருநோக்கிற்
குரியவர் எம்போல் உலகத்தில் யாருள்ளார்?
அமைவாய் இருந்தென் வாழ்க்கையினை ஆராய்ந்தால்
இமைகள் நனையும் பெருமூச் சிறங்கிவரும்;
கண்ணகியா வாழும் கருத்தோடு தானிந்த
மன்றும் அரசாங்கத் தாலியை மார்பணிந்தேன்;
எந்த புதிதில் ஒழுக்கம் வழுவாது
சிந்தைக் கிடமின்றி நினைத்தாங்கு வாழ்ந்திருந்தேன்;
நீண்டநாள் இந்த ஒழுக்கம் நிலைக்கவில்லை;
வேண்டியவர் என்று விழிசிமிட்டிச் சிலர்வந்தார்;
கையூட்டுத் தந்தென் கற்பை விலைபேசிப்
பைய எனைக்கெடுக்கப் பலர்சூழ்ந்து கொண்டார்கள்;
அதிகாரங் காட்டியெனை அச்சுறுத்திக் கற்பை
பறிக்கச் சிலபேர் மேல்வந்து மொய்த்தார்கள்;
தண்ணீரி லாக்காட்டில் தள்ளுவோம் என்று சொலி
என்னீர்மை கெடுத்தார்; இரும்புலிகள் சூழ்ந்த

வெள்ளாடு போலானேன்; வேறு வழியின்றித்
தள்ளாடி அவராசை தணிக்கத் துணை போனேன்;
சூழ்நிலையாற் கெட்டேன்: இன்றதனைச் சுகமான
வாழ்முறையாக் கொண்டுவளம்பெருக்கக்கற்றுவிட்டேன்
நானும் பிறரால் கெட்டு நலிந்ததுண்டு;
நானும் பிறரைக் கெடுத்து நகைத்ததுண்டு;
சங்கிலித் தொடர்போல வருகின்ற சங்கதியை
இங்குநீர் ஆராயின் என்மேற் சினங்கொள்ளீர்;
சாக்கடைகள் தேங்கச் சந்தர்ப்பம் தந்துவிட்டு
ஈக்கள் கொசுக்கள் ஏன்மொய்ப்ப தெனலாமோ?
அடுத்தவர் வாழ்வை அடியோ டழித்துக்
கெடுத்தவர் செல்வம் கெழுமியவ ராயிருந்தால்,
நத்தித் துதிபாடும் நாய்கள் உளமட்டும்
கொத்திப் பிணந்தின்னும் கூரலகுக் கழுகுகளின்
கொண்டாட்டம் ஓயாது; ஒழுக்கம் குலைத்துப்
பெண்டாளும் இலஞ்சப் பேயும் மடியாது;
பாசி படிந்த பாறையெனச் சமுதாய
வீதி இருந்தால் வழுக்கித்தான் விழுவார்கள்;
பேராசைப் பாம்பும் பெருமோசப் பூரானும்
தீராத தன்னலத் தேளும் உறைகின்ற
புற்றுகளும் பொந்துகளும் சமுதாயப் பொதுவழியில்
நிற்றல் முறையோ? நிலத்தைச் சமப்படுத்திப்
புற்றைத் தகர்த்துப் பொந்துகளை மேடாக்கிக்
கொட்டுகின்ற நச்சுக் குலத்தை அற ஒழித்துச்
சமுதாய வீதி சமப்படுத்திப் போடுங்கள்;
இமையாரின் வாழ்கின்ற எண்ணம் தொலையுங்கள்;

இமையாரின்—தேவர்களைப் போல—அதாவது கயவர்களாக. தேவரனையர் கயவர் என்பது திருக்குறள்.



எக்கேடு கெட்டால் எனக்கென்ன என நினையாத்
தக்கார் இருப்பின்அவர் தாளைப் பிடித்துக்
கேட்க விழைகின்றேன்; எண்ணக் கிளர்ச்சிக்கு
ஏற்பன செய்க எனப்பணிந் திரக்கின்றேன்;
குருதி யுடன்சீழ் கொட்டிடினும் சொறிதற்குப்
பெருவிருப்பம் தோற்றுவிக்கும் சொறிசிரங் குள்ள
கரங்களே எம்கரங்கள்; ஆனாலும் இந்தச்
சிரங்கையும் பிள்ளைகட்குச் செல்வமாய் ஒட்டிவிட
அருவருப் படைகின்றேன்; அதிகாரம் செய்யஇனி
வருகின்ற தலைமுறைக் கேனுமிவ் வரிப்புநோய்
பற்றா திருக்கப் பாடுபட வேண்டுகிறேன்;
முற்றா முனமேஇந் நோயை முறியடிப்பீர்;
தான்வாழ எண்ணும் அதிகாரத் தலைமுறைகள்
ஏன்வாழ வேண்டும்? சமுதாயம் ஏற்றமுற
அரசியலைப் பேணும் அதிகார வர்க்க
வரிசை பெருகட்டும்; வையகமும் வாழட்டும்;
உள்ளந் திறந்துநான் உள்ளதெல்லாம் கூறிவிட்டேன்;
கள்ளமென எண்ணாதீர்; காரியங்கள் ஆற்றிடுவீர்;
கழுகுக்கு மூக்கில் வியர்த்தால் பிணமொன்று
அழுகிக் கிடக்குமென அறைவார்கள்; அதுபோல
என்றன் விரலின் இடுக்கினுள் ளேயரித்தால்
பொருளோ டொருவன் போந்துள்ளான் என்றுபொருள்
இப்பொழு தென்றன் கையில் அரிக்கிறது;
தப்புத்தான்! என்செய்வேன்; தனியே எனக்காகக்
காத்திருக்கின் றாராம்; கருப்புப் பணத்தைச்
சேர்த்த பணமுதலைச் ‡சினிமா நடிகராம்;

‡சினிமா நடிகர்—என்னையடுத்து அரங்கில் பாட இருந்த தலைப்பு சமுதாய வீதியில் சினிமா நடிகர் என்பது. ஆதலின் அவர் வந்து காத்திருப்பதாகச் சொல்லப் படுகின்றது.

கொழுத்த பணத்தைக் கொடுக்கத்தான் வந்திருப்பார்
புழுத்த சிரங்கிற்கு அதுதானே பொன்மருந்து;
ஆதலினால் வருகின்றேன; ஆவன செய்திடுவீர்,
காதலினால் கைகூப்பி னேன்,

*மதுரை யாதவர் கல்லூரியில்*
*நடந்த கவியரங்கில் பாடப்பட்டது.*

# 6 கருப்புப் பணம்

பேராசை வணிக நெஞ்சும்
பிழைபட்ட வரிவி திப்பும்
நேராக மோதிக் கொள்ள
நிலத்தில்நான் பிறந்து வந்தேன்;
யாராரோ செம்முக் கோணம்
எடுத்தாலும் தடைசெய் தாலும்
ஆராலும் தடுக்கொ ணாதென்
பிறவியை அறுக்கொ ணாது,

இருட்டிலே பிறந்தே னென்றே
எள்ளுவீர்; அதனா லென்ன!
உருட்டுவேன் பகையா னாரை;
ஒடுக்குவேன்; அறமல் லாத
திருட்டிலே கிடைத்த போதும்
தேனுந்தான் கசப்ப துண்டோ?
இருட்டிலே பிறந்தேன் உண்மை!
எனைக்கொண்டே வெளிச்சம் போட்டார்.

ஆண்டவோர் கட்சி தன்னை
எதிர்க்கட்சி ஆக்கி வைப்பேன்;
தீண்டுவார் ஆரும் இன்றித்
தேய்ந்தவோர் கட்சி தன்னை
மீண்டும் நான் ஏற்றி வைப்பேன்;
மேல்வரும் இயல்பை எல்லாம்
ஈண்டுநீர் தெளிவீ ராயின்
என்னலால் அரசொன் றுண்டோ?

என்னாலே முளைத்த கட்சி
எத்தனை யோவுண் டென்றன்
பின்னாலே எம்மெல் லேக்கள்
பின்பற்றித் திரிவ துண்டு;
கண்ணாலே அசைப்பே னாயின்
கட்சிகள் பிளந்து போகும்;
சொன்னால்நீர் நம்ப மாட்டீர்.
தொழத்தகும் கடவுள் நான்தான்.

பொருளியல் கற்றா ரெல்லாம்
முட்டாளாய்ப் போக வைப்பேன்;
வருகின்ற எதிர்கா லத்தை
அரசியல் வாதி யானார்
உருவகம் செய்த தெல்லாம்
ஒன்றுமே உருப்ப டாமல்
பெருமோசம் ஆக்கு விப்பேன்;
பெரியன்யார் என்னின் சொல்வீர்?



அருளியல் துறையில் கூட
ஆதிக்கம் பெற்றுள் ளேன்யான்;
திருமலை வேங்க டத்தான்
திருநீற்றுப் பழனி யாண்டான்
இருவரும் மாதந் தோறும்
பெருந்தொகை ஈட்டல் எல்லாம்
கருநிறப் பணமென் றீரே
நான்வைத்த கருணை ஐயா!

திரையுல கத்தில் யான்செய்
திருவிளை யாடல் முற்றும்
உரைசெயும் ஒருவன் உண்டா?
உண்மையைச் சொல்வ தாயின்
நரைதிரை முதிர்ந்தோர்க் கெல்லாம்
நானேவல் செய்தி ருப்பேன்;
புரையிலா இளையோர்க் கெல்லாம்
எட்டாத பொன்வாத் தாவேன்.

கொண்டவன் ஒருவ னுக்கே
நலமெலாம் கொடுத்து மாற்றார்
கண்ணாலும் காண்கி லாது
கரத்தலே தலைக்கற் பென்பார்;
பண்டெனை எவன்கொண் டானோ
அவனுக்கே பணிசெய் தார்க்கும்
கண்படத் தோன்றேன் என்றன்
கற்பினைப் போற்றி னீரா?

ஒருரூபாய் நோட்டுக் கிந்நாள்
உண்மையில் பத்துக் காசே
பெறுமானம் என்று வல்லார்
பேசுவர்; உண்மைக் காசின்
உருவத்தைத் தேய்த்துத் தேய்த்தே
ஒடுக்கிய தாரென் பீரேல்
பெருமைக்குச் சொல்ல வில்லை;
என்செயல் பெரிய தன்றே!

கலப்படம், நோட்ட டித்தல்,
கருஞ்சந்தை இரட்டிப் பாக்கல்
வெலப்படாக் கடத்தல், ஆட்சி
விதித்துள வரியை ஏய்த்தல்
நிலத்திடை இவ்வா றெல்லாம்
நெடும்பிறப் பெடுத்த போதும்
புலப்படேன் கடவுள் போலப்
புரைசெய்வேன்; வினையைப் போல.

மண்ணினுட் கிடப்பேன்; ஓங்கும்
மாளிகைச் சுவராய் நிற்பேன்;
பொன்னினுள் கரப்பேன்; வைரப்
புதையலாம் மறைவேன்; அந்தக்
கண்ணனும் அவதா ரங்கள்
ஒன்பதே காட்டி னானாம்;
எண்ணின்என் அவதா ரங்கள்
எழுதவும் முடிவ துண்டோ?



பழியிலா தீட்டும் வெள்ளைப்
பணத்திலும் கரும்ப ணந்தான்
கழிசெயல் புரிவ தென்றோர்
கடும்பழி தூற்று கின்றார்;
அழிவிலா வினைஇ ரண்டில்
தீவினை ஆட்சி ஒன்றே
கொழியலை உலகை எல்லாம்
ஆட்டுமோர் கொள்கை தேரார்.

ஒளியினில் மட்டு மேதான்
இன்பங்கள் உண்டென் பார்போல்
களியினில் மதியி ழந்தார்க்
காண்கிலேன்; வெண்ப ணந்தான்
துளிகுறை வில்லா இன்பம்
தோற்றுமென் றரற்றல் வேண்டா;
ஒளியிலா இருளிற் கூட
இன்பத்தை உணர்ந்தார் உண்டே!

அன்னிய நாட்டி ருந்தோர்
அருந்தம்பி எனக்கு வாய்த்தான்;
பன்னுவார் அருஞ்சி வப்புப்
பணமென அவன்றன் பேரை
புண்ணியன் நாடு கட்குள்
புகுந்துசெய் விளையாட் டெல்லாம்
எண்ணிடின் தோற்றுப் போவேன்
எனக்கதில் அண்ண னாவான்;

புத்தக உருவ மாகப்
புகுந்துரு மாற்றிக் கொள்வான்;
இத்தரை மக்கள் வாட்டும்
எரிபசி தணிக்க வந்த
சத்துண வாகப் போந்து
தன்னுரு மாற்றிக் கொள்வான்;
வித்தகன் நடிப்பி னாலே
'பாரத்'தை வெற்றி கொள்வான்.

உருவத்தாற் சிவப்பா னாலும்
உள்ளத்தாற் கருப்ப னேதான்;
கருவத்தில் என்னை விஞ்சும்
காட்சியன்; கண்முன் தோன்றா
அருவத்தில் எனக்குத் தம்பி
ஆயினான்; எங்கள் வாழ்க்கை
மருமத்தைச் சொல்லு கின்றேன்;
மற்றவர்க் குரைத் திடாதீர்.

பிறப்பினால் கருப்பன் என்றே
பேசுவீர் என்னை; நெஞ்சம்
திறப்பிரேல் உண்மை கண்டு
தெளிவிரேல் மக்க ளுள்ளும்
பிறப்பினால் அறிவால் அன்பால்
பேசரும் ஒழுக்கால் எல்லாம்
கருப்பவர் காண்பீர்; அன்னார்
கரும்பணம் அனையார் அன்றோ?



உடலுக்குப் பணந்தான் செல்வம்;
உயிருக்கோ புகழ்தான் செல்வம்;
கடைத்தேங்காய் திருடிக் கோயிற்
கடவுளுக் குடைத்தாற் போல
உடைப்பிறர் செல்வம் ஈந்து
உயர்வள்ளல் வேடம் போட்டுக்
கெடலிலாப் புகழ்ச்செல் வத்தும்
கருஞ்செல்வம் சேர்த்தார் உண்டே!

பிள்ளையைச் செல்வம் என்றார்
பேசருங் குறள்நூ லாரும்;
பிள்ளையுட் கருப்புச் செல்வம்
பிரிந்திந்த வையம் பேசும்;
கிள்ளையாள் ஒருத்தி கற்பைக்
கெடுத்தவன் ஓடிப் போகப்
பிள்ளையைப் பெறுவா ளாயின்
கருப்பெனப் பேசும் வையம்.

கல்வியும் செல்வம் என்றால்
அதற்குள்ளும் கருப்புச் செல்வம்
புல்லுதல் இயல்பு தானே!
பொழுதெலாம் வீண டித்தோர்
நல்விடைத் தாளைத் தேடி
நாடெலாம் அலைந்து பெற்ற
கல்விச்சான் றிதழும் கூடக்
கருப்புச்செல் வம்தான் அன்றோ?

‡நாசிக்கில் பிறந்த போது
எப்பழி நான்சு மந்தேன்?
பேசிடின் வணிக ரானார்
பேராசைக் குணத்தால் இன்றோர்
வேசிக்குப் பிறந்தேன் போன்று
வீண்பழி தாங்கி வாழ்வேன்;
யோசிக்கும் திறத்தீர்! என்மேல்
ஒருபழி கூறல் ஆமோ?

பன்னீர்தான் சாக்க டைக்குள்
பாயுமேல் என்ன வாகும்?
தன்னீர்மை இழக்கும்; அந்தச்
சாக்கடைப் பெயரே தாங்கும்;
தன்னிலை உணராது யாரும்
தகாநட்புக் கொள்ளு வாரேல்
எந்நிலை யடைவர்? காட்ட
யானுளேன் எடுத்துக் காட்டா.

அழுகிய தொழுநோ யாளன்
அங்கையின் வெண்ணெய் ஆனேன்;
தொழுநோயன் வெண்ணெய் தொட்டால்
அவன்றனைத் தூற்றா ராகிப்
பழுதன்றே இந்த வெண்ணெய்
என்றெனைப் பழித்துக் கூறல்
முழுதுற உணர்ந்த உங்கள்
அறிவுக்கு முறைமை யாமோ?

‡ நாசிக்கில்—இந்திய அரசின் நாணயச் சாலை உள்ள இடம் நாசிக்.



எத்தனை யோபி றப்பை
எடுத்துநான் அலுத்து விட்டேன்
அத்தன்நீர் ஆத லாலே
என்பிறப் பறுப்பீர்; நீங்கள்
எத்துதல் ஏய்த்தல் விட்டால்
என்பிறப் பறுந்து போகும்;
இத்தரை வாழ்வு தீரும்.
இஃதென்றன் விருப்ப மாகும்.

கெஞ்சினேன் எனைக்க ருப்புப்
பணமெனக் கிளத்தல் வேண்டா;
வஞ்சகன் ஒருவ னாலே
வான்பழி சுமந்து வாழ்வேன்;
நெஞ்சினுட் கிடக்கை எல்லாம்
உரைசெய்தேன்; கேட்ட நீவிர்
கொஞ்சமென் மேலி ரக்கம்
கொள்விரேல் ஒன்றே போதும்.

*திருப்புத்தூர் ஆறுமுகம் பிள்ளை*
*சீதையம்மாள் கல்லூரிக் கவியரங்கில்*
*பாடப்பட்டது.*

# 7.காந்தியார் இன்று வந்தால்

விடுதலையைக் கண்டு வீணனால் மண்மீது
படுதலுக் காளாகிப் பாருலகை நீத்தவன்நான்;
இந்தியத்தை நீங்கி ஆண்டுகள் ஏழைந்து
சென்றுவிட்ட தாதலினால் சிறப்பாக அதன்வளர்ச்சி
கண்டுவர வேண்டுமெனும் கருத்தென்னை உந்தியதால்
பண்டை உடல்தாங்கிப் பாரதத்தைக் காணவந்தேன்;
சும்மா வரவில்லை மொழிவழியே தொகுத்துள்ள
அம்மா நிலங்கள் அனைத்தும்நான் கண்டுவந்தேன்;
மேட்டுக் குடிகண்டேன்; மேலே துணியணியா
ரோட்டுக் குடியாரை நோக்கிநான் மீண்டுள்ளேன்;
சுற்றித் திரிந்து சொல்லரிய பாடங்கள்
கற்றுத் தெளிந்து கழறுதற்கு வந்துள்ளேன்.



இத்தனை யாண்டுகளில் எழில்மாதர் முன்னேற்றம்
எத்தனை வளர்ந்துள தெனவே மதித்தறிய
விரும்பும் மனத்தினனாய் வேல்விழியார் தாம்பயிலும்
அருங்கல்விச் சாலை அருகினிலே போய்ப்பார்த்தேன்;
ஏடு சுமந்தே இளைஞன்போல் தோன்றுகின்ற
ஆடை அணிந்தே அங்குவந்தா ரம்மகளிர்;
பெண்ணென்றும் ஆணென்றும் பிரித்தறிய முடியாத
வண்ணம் உடைதாங்கி வந்தாரப் பூங்கொடியார்.
'பெண்ணென்றும் ஆணென்றும் ஆன்மாவிற்
பேதமில்லை'
என்றுரைத்தார் ஞானமொழி எடுத்து மொழிவார்போல்
ஆடையிலும் பேதம் அகற்றி நடக்கின்ற
பீடுடைய பெண்டிர் 'ஞான'ப் பெருவிளக்காய்
விளங்குதல் கண்டு வியப்பிலே மூழ்கி நின்றேன்;
துளங்கும் மனத்தினனாத் தொடர்ந்து நடக்கையிலே
இந்துக்கள் கூடக் கைலி எடுத்தணிந்து
விந்தையுற முகம்மதியத் தோற்றம் விளைத்திருந்தார்;
குல்லாவை நீக்கிவிட்டுக் கூந்தல் வளர்த்ததனால்
அல்லா மதத்தினரும் இந்துக்கள் ஆகி வந்தார்;
மதத்திற் கிடையே மாபெரிய ஒற்றுமையோர்
விதமாய் வளர்கின்ற விந்தையினை நான்கண்டேன்;
ஏற்ற கொள்கைகளில் இசைவில்லை என்றாலும்
தோற்றத்தி லேனுமிக் கொள்கை துலங்குவதால்
கொஞ்சம் மகிழ்ந்தேன்; கூட்டமா மக்களெல்லாம்
மிஞ்சுமார் வத்தினராய் மேல்விழுந்து மோதுகின்ற
திரையரங் கொன்று தென்படவே நின்றுவிட்டேன்
திரைப்படத்தைப் பார்த்தால் நாட்டுநிலை தெரியவரும்;

என்றெண்ணி உட்புகுந்தேன்;ஏதோ ஒருபெயரில்
அன்று படம்போட்டார்; படத்தில் அரிவையர்கள்
நூலாடை யொன்று நுடங்கிடையில் இருந்தாலும்
மேலாடை யின்றி மிகுதியும் வந்தார்கள்;
கண்டதனால் நெஞ்சம் கலங்கினேன்; மனத்திரையில்
பண்டு நிகழ்ந்த நிகழ்ச்சிப் படங்கண்டேன்;
சேலத்தில் ஒருநாள் பயணம்நான் செய்கையிலே
ஞாலத்தைக் காக்கின்ற நல்லோன் உழவன்உடல்
மூடத் துணியின்றி வாடக்கண் டவ்வாட்டம்
ஓடி ஒளியும்வரை உழவர்களின் துணித்தேவை
நிறையும்வரை அரையாடை உடுத்துவதாச் சூளுரைத்த
உரையென்றன் காதில் ஒலித்திடவே மெய்சிலிர்த்தேன்.
அன்று நான் சொன்ன அறைகூவல் மொழியதனை
இன்றும்பின் பற்றுமிவ் வேந்திழையார் திறமென்னே!
நம்மைப் பின்தொடர்வார் நாட்டிலிலை யோவென்ற
வெம்மை அப்பொழுதே விலகியது; வெளிவந்தேன்;
உண்ணா விரதப்போர் எனஎழுதி ஒட்டியதைக்
கண்ணுற்று நின்றேன்; காரணத்தைக் கேட்டறிந்தேன்;
தொழிற்சாலைக் கெரிவைத்த தோழர்களைக்கைதுசெய்த
பழிகார அரசெதிர்த்துப் பட்டினிப் போர் என்றார்கள்;
வன்முறையே எங்கள் வாழ்க்கை என்பவர்கள்
தன்னை வருத்துகின்ற உண்ணா விரதப்போர்
தொடங்குமொரு வேடிக்கை தோன்றும் பொழுதெல்லாம்
அடக்க அடங்காச் சிரிப்பா அலர்கிறது
யாரும் எதையும் நடத்திட லாம்என்ற
நாறும் நிலைகண்டு நாணித் தலைகவிழ்ந்தேன்;



பத்தினியர் தேர்விற்குப் பாஞ்சாலி வேட்புமனு
வைத்தால் அதையும் வரவேற்கும் இந்நாடு;
புலியும் சிறுத்தைகளும் புலால்உணவின் கேடுகளை
மொழிந்தால் அதையும்வாய் மூடாது கேட்டிருக்கும்;
எனஎண்ணி மனம்நொந்து ஏகுகையில் அங்கொருவன்
தனதன்னா எனப்பாடித் தள்ளாடி நடைபோட்டான்;
சாராய வாடை மூக்கிற் சரம்பாய
யாரப்பா நில்லென்றேன்; என்றன் குரல்கேட்டுத்
தேர்குலுங்கி நிற்பதுபோல் தெருவில் அவன்நின்றான்;
ஊர்நடுவில் சாராயம் விற்க ஒருகடைதான்
உண்டோ எனக்கேட்டேன்; ஓ!ஓ! எனச்சிரித்தான்;
பண்டையக் காலத்துப் பைத்தியமாய் எனைஎண்ணி
மதுவிற்கும் கடைகட்கு உரிமம் வழங்கவில்லை.
எதுவேண்டு மானாலும் இருளில் அதுகிடைக்கும்;
என்றான் அதுகேட்டு இந்நாட்டில் சட்டம்
பொன்றியதோ என்றேன்; புன்னகை முகத்தினனாய்
சட்டம் இருக்கிறது; சாராயம் கிடைக்கிறது;
தட்டினால் தருகின்ற தருமம் நடக்கிறது;
கையில் உறைதரித்து மின்சாரக் கம்பியினை
பையவே தொட்டால் மின்சாரம் பாய்வதில்லை;
தொட்டதும் உண்மை; தொய்வை உறையதனால்
வெட்டாது மின்சாரம் விலகியதும் உண்மையன்றே?
சட்டம் இருக்கிறது; சாராயம் கிடைக்கிறது;
விட்டுத்தள் ளுங்கள் எனஅவனும் விளம்புகையில்
மாண்டுவிட் டான்கணவன் என்றாலும் அம்மங்கை
ஆண்டுகள் தோறும் கருப்பம் அடைகின்றாள்

என்பதுபோ லன்றோ இருக்கின்ற தென்றேன் நான்;
அன்புடையீர்! இதுவும் அகன்றுவிட்ட திந்நாளில்
†கால்நூறு ரூபாயைக் கட்டினால் குடிப்பதற்கு
ஏலும் அனுமதியை அரசாங்கம் ஈகிறது
என்றுரைத்தான்;நெஞ்சில் இருள்சூழ்ந்தாற்
போலானேன்;

நன்று!நன்று! இந்தியத்தின் வளர்ச்சி எனநகைத்தேன்
ஒருநூறு கட்டினால் சிறுகுற்றம் புரிந்திடவும்
இருநூறு கட்டினால் எக்குற்றம் புரிந்திடவும்
அனுமதியை இனிமேல் அரசுகளே தரும்போலும்;
எனஎண்ணி அகல்கையிலே வீதி இருமருங்கும்
கையில் தடிதூக்கிக் கழிப்பிடத்து வேலையினைச்
செய்யும் சிறுவர்களின் செயல்கண்டு மனம் நொந்தேன்;
பன்றியொன் றந்தப் பக்கத்தில் வந்திடவே
நின்று சுழற்றி நெடுந்தடியை வீசிவிட்டான்;
வீதியிலே பன்றி வினாவாக ஓடியது;
மீதிப் பணியை மேற்கொள்ள அவன் சென்றான்;
வேல்கொடுத்துப் போவென்றார்;வீரத் திருமாதர்
கோல்கொடுத்துக் குந்தென்றார் இந் நாட் குலமாதர்
நிகழ்ச்சிகள் மாறினும் நெஞ்சிலே வீரத்தைப்
புகட்டுகின்ற இச்செயலைப் போற்றத்தானேவேண்டும்;
ஆங்குள்ள பையனை அருகழைத்து நான் சொன்னேன்.
'தீங்கன்றோ இவ்வாறு தெருவில் இதைச்செய்தல்'
என்மொழியைக் கேட்டவனும் ஏளனமாச் சிரித்திருக்க
சின்மொழிப் பேதாய்! சிரிக்காதே! இப்பொழுதே
உன்பெற்றோர் பாலிதனை உடனே உரைத்துத்
தண்டனை வாங்கித் தருவேன் எனச் சொன்னேன்;

---

† மதுவிலக்குக் கொள்கை இருந்தபோது பர்மிட் வாங்கிக்கொண்டு (இருபத்தைந்து ரூபாய் கட்டி) குடிக்கலாம் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தகாலத்தில் பாடப்பட்டது.



ஆர்ப்பாட்ட மாச்சிரித்தான்; ஐயா கிழவரே!
நீர்எமக்குத் தீங்கு நிகழ்த்த முடியாது;
ஏனென்றால் எங்கள் பெற்றோரும் இவ்விடத்தே
தானென்றால் அவரென்னைத் தண்டித்தல் எவ்வாறு?
இரவில் அவர்க்கு உரியதாம் இவ்விடத்தைப்
பகலிலே நாங்கள் பயன்படுத்திக் கொள்கின்றோம்;
என்றான்; அதுகேட் டென்தலையே சுற்றியது;
அன்று கிராம சுகாதார அவசியத்தை
நிர்மாணத் திட்டத்தில் நிலையுறுத்தி வைத்ததெல்லாம்
நிர்வாண மாயிங்கே நிலைகுலைந்து போனதனை
எண்ணி மனங்குமைந்தேன்; எதிரிலுள சிறுவனிடம்
உன்பேரைக் கூறென்றேன்: அவனும் உடனே
காந்திஎன்றன் பேரென்றான்; கண்கலங்கி
விட்டேன்நான்;

காந்திபேர் வாழவைத்துக் காந்தியத்தைக்
கொன்றுவிட்டார்;

தருமகர்த்தா சோசலிசம் தான்இந்த நாட்டுக்கு
உரிய கொள்கையென உரைத்தேன்நான் அந்நாளில்
எண்ணிய எண்ணம் ஈடழிந்து போவதனைக்
கண்ணாலே காணுகின்றேன்; காரேறி வருகின்ற
தரும கருத்தாக்கள் தம்செயலும் பார்த்துவிட்டேன்;
தருமத்தின் பெயராலும் தமக்கே நலந்தேடும்
கருத்தர்களால் சோசலிசம் கானல்நீர் ஆவதலால்
பெருத்தபயன் இல்லையெனப் பிழையின்றிக்
கண்டுவிட்டேன்;

தருமத்தை வீழ்த்திவிட்டுக் கருத்தர்களை வாழ்விக்கும்
மருமத்தை வெளிப்படுத்தல் வாய்மையாம்;நானுரைத்த
குடும்பநலக் கொள்கைகளைக்கொள்ளாராய் இம்மக்கள்
கெடும்புதரும் திட்டமெனக் கீழெறிந்து விட்டார்கள்;

மாத்திரையை வளையத்தை நம்புகிறார்; மாறாளன்
வார்த்தையை மட்டும் நம்ப மறுக்கின்றார்;
கணவன் மனைவி உறங்கத் தனித்தனியே
மனையுள் அறையமைப்பீர்; அதுதான் மனத்தினைப்
பேணும் முறையென்றேன்; பிழையென்றுதள்ளிவிட்டார்.
ஆணும் அவன் மனையும் அறைமுழுதும் பொருள்
குவித்துச்
சிறிய இடத்தினிலே சிங்காரப் படுக்கையிட்டு
அருகரு காகத் துயில்கொண்டால் அக்கண்ணில்
உறக்கம் வருமா? ஒவ்வோராண் டிறுதியிலும்
பிறக்கும் ஒருகுழந்தை; பேதைமையை என்சொல்ல!
கதவைத் திறந்து வைத்தால் கள்ளனுக் கெளிதாகும்;
கதவை அடைத்துவைத்தால் களவு நடக்காது;
இந்தச் செயலில் இருக்கின்ற மறைபொருளை
எந்த மனிதனுமே ஏற்க மறுக்கின்றான்;
நகரங்கள் கூடக் கிராம நலம் பொலியும்
சிகரங்க ளாகவெனச் சிந்தித்தேன்; இப்பொழுதோ
கிராமங்கள் எல்லாம் நகரக் கிளர்ச்சியினால்
உருமாறிப் போய்விட்ட உவர்ப்பையே காணுகிறேன்;
குடிசைத் தொழில்வளர்க்கும் என்னுடைய கொள்கை
அடியோடு சிதைந்துளதை ஆரும் அறிவாரே!
எங்கும் குடிசைகள் தாம்; என்றாலும் அதனுள்ளே
பொங்கும் தொழில்ஒன்றே! எதுவென்றால்பூமியிலே
இனவிருத்தித் தொழிலொன்றே இரவு பகலாக
முனைப்பாய் நடக்கிறது; முன்னேற்றப் பாதைக்குக்
குடிசைத் தொழில்வழங்கும்கொடையிதனைக் கண்டீரோ
மிடிமை வளர வேறென்ன துணைவேண்டும்?



கதரே சிறந்ததெனக் கதறியதை மறந்தவராக்
கதரிலே 'பாலிஸ்டர்' கலந்துவிட்டார் இந்நாளில்
தீண்டாமை ஒழிக்கநான் தெரிவித்த செய்திகளைத்
தீண்டாராய் விலக்கிவிட்டுத் தீண்டாமை
போற்றுகிறார்;
எந்திரத் தொழிலுக்கே ஏற்றம் கிடைக்கிறது;
முந்தியத் தொழில்தான் முன்னேறிச் செல்கிறது,
குடிசைத் தொழிலுக்குக் குழியிறக்கம் நடக்கிறது;
மடியும் நிலைநோக்கித் தேய்ந்து வருகிறது;
வீட்டுப் புறத்தூய்மை வேண்டுமென்றேன்;
இங்குள்ளோர்
காற்றையும் அசுத்தப் படுத்திக் கலக்குகின்றார்;
ஊருக்கு நானுரைத்த கொள்கைகள் ஒவ்வொன்றும்
யாருக்கோ எனஎண்ணி எடுத்தெறிந்து விட்டார்கள்;
ஆனாலும் என்பேரால் அரங்குகள் பலஉண்டு;
வானோங்கும் கல்லூரி என்பேரால் வைத்துள்ளார்;
இல்லம் பலஅமைத்து என்பெயரைச் சூட்டியுளார்;
நல்ல சிலைவடித்து நாடெங்கும் நாட்டியுளார்;
'காந்தி செயந்தி' எனக் கொண்டாடிக் களிக்கின்றார்;
ஏந்திய கொள்கைகளை எங்கோ புதைத்துவிட்டார்;
என்னை மகாத்மா எனஉயர்த்தி, என்கொள்கை
தன்னைத் துராத்மாபோல் தள்ளி ஒதுக்கிவிட்டார்;
கோபுரத்தில் என்னைக் கொலுவைத்தார்;
கொள்கைகளைத்
தீவர்த்தி யாக்கி எரித்துச் சிதைத்துவிட்டார்;
என்னைப் பன்னீரில் ஆட்டுகின்றார்; என்கொள்கை
தன்னைச் சாக்கடையில் தள்ளிவிட்டுப் போகின்றார்;
என்பேரில் மட்டும்தான் சவகருக்கும் இனியஅன்பு;
என்கொள்கை மீதில் எள்ளளவும் கிடையாது;

குண்டுகளால் என்னைக் கோட்சேக்கள்
கொல்லவில்லை.
மண்டும் பேர்அன்பால் மக்களே கொல்கின்றார்;
உடம்பைத்தான் அவன்சிதைத்தான்; ஊர்மக்கள்
நீவிரோ
உடம்புள் இருந்த உயிரையே சிதைத்துள்ளீர்;
கோட்சேயால் முடியாத கொலைச்செயலை அன்புடைய
நாட்டவரே செய்துவிட்டார்; மேனி நடுங்குகின்றேன்;
இந்தியத் திற்கும் எனக்கும் உளஉறவு
நைந்த பழங்கயிறா நாளும் அறுகிறது;
சொந்தமெலாம் போனபின் உங்களோ டெனக்கென்ன
பந்தம் இருக்கிறது! பாதை தெரிகிறது!
போய்வருவேன் என்று புகல மனமில்லை;
போகின்றேன் நெஞ்சம் புலந்து.

இராமநாதபுரத்தில் நடந்த பாண்டித் துரைத்தேவர் 125–ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாக் கவியரங்கில் சோழ வந்தான் அரசன்சண்முகனார் வாழ்த்திப் பாடுவதாகப் பாடப்பட்டது.

# 8 பாண்டித்துரைத் தேவர்

வீரத்தாற் சிறந்த நிலம்;
விவேகத்தில் முதிர்ந்த நிலம்;
சேது வேந்தர்
ஈரத்தாற் செழித்த நிலம்;
இசைப்பயிரை வளர்த்த நிலம்;
மிளகாய் தந்த
காரத்தால் சூழ்ந்த நிலம்
முகவைநிலம் என்பதனைக்
கண்டோ மன்றே;
வீரமிருக் கும்இடத்தில்
ஈரமொடு காரமெல்லாம்
இருக்குந் தானே!

ஏதுபதி? ஏதுபதி?
என்றுதமிழ்ப் புலவோர்கள்
இங்கு மங்கும்
மோதுபதி னாயிரவர்
முகவாட்டம் தீர்த்தபதி;
முகம்ம லர்ந்த
சேதுபதி எனுஞ்சேதி
செவிபதிய நெஞ்சேறிச்
செழித்த தன்றே!
மாதுபதி செஞ்சடையான்
மலரடியே பதியென்றார்
மரபு வாழ்க!

வாழவந்தான். செந்தமிழ்த்தாய்
வழங்க வந்தான்; வையத்துப்
புலவோர் மன்றுள்
வேழம் வந்தால் எனவந்தான்;
பாண்டித்து ரைவேந்தன்;
வெற்றி மாலை
நீளவந்தான். அவன் புகழை
நெஞ்சிருத்தி வாழ்த்துதற்கு
அரங்கில் இந்தச்
சோழவந்தான் புலவன்யான்
சொற்றமிழால் கவிமாலை
தொடுக்க வந்தேன்.



பண்டுதமிழ் மறவர்குடிப்
பரம்பரையில் பிறந்ததனால்
பாண்டி யானாய்;
கொண்டகுடி காப்பதற்குக்
கோலெடுத்தாய் ஆதலி னால்
துரையு மானாய்
தென்றமிழைக் காக்க இமை
சேராதே நீ விழித்துத்
தேவர் ஆனாய்;
விண்டுரைத்த காரணத்தால்
பாண்டித் துரைத்தேவர்
விளங்க நின்றாய்.

உந்தையினால் அரசுரிமை
நீ பெற்றாய்; உனக்கு நிக
ராக யானும்
எந்தையினால் அரசுரிமை
பெற்றுள்ளேன்; 'என்ன'? என
வியத்தல் வேண்டா;
தந்தையினால் அன்றேயான்
† அரசன் சண் முகனானேன்;
தக்க இந்தப்
பந்தத்தால் யானுன்னைப்
பாராட்டல் முறைமை யெனல்
பகர வோயான்!

† இயற்பெயர் சண்முகன் தான். தந்தையார் அரசப்பனார், தந்தையார் பெயரோடு இணைத்து அரசன் சண்முகனார் என வழங்கப்பட்டார்.

தானிருந்து வாழ்வதினும்
தமிழிருந்து வாழ்வது தான்
தக்க தென்று
வானிமிர்ந்த வளமனையைத்
தமிழ்ச்சங்கம் வைப்பதற்கு
வழங்கி னாயே!
‡தேனிமிர்தல் போற்புலவோர்
திருக்கரத்துக் கொடைபோற்றிச்
செய்யுள் யாக்கக்
கூனிமிர்ந்த பாண்டியனாய்த்
தமிழ்நிமிரக் கொடையளித்த
கோவே போற்றி.

நூலுக்கும் வாழ்வளித்தாய்.
நுவல்வார்க்கும் வாழ்வளித்தாய்;
ஆள்தி றத்தால்
கோலுக்கும் வாழ்வளித்தாய்;
*பாதிரியா ராற் குறைவாய்ப்
பட்ட நம்முப்
பாலுக்கும் வாழ்வளித்தாய்;
பண்புக்கும் வாழ்வளித்தாய்;
மனிதம் என்னும்
ஆலுக்கும் விழுதானாய்;
அறிவுக்கு முடியாகி
அமைந்த கோவே!

‡ தேனிமிர்தல் — தேனீக்கள் ஒலித்தல். *பாதிரியார் — பாதிரியார் ஒருவர் திருக்குறளிற் பல பாடல்களை எதுகை நோக்கி திரித்துப் பதிப்பித்தார். அந்நூற் படிகளை எல்லாம் பணம் கொடுத்து வாங்கி நெருப்பிட்டுக் கொளுத்தினார்.



மோதுகின்ற புதுமைகளை
முற்றாக நீ மறுக்க
முனைய வில்லை;
ஆதிநாள்தொட்டு வந்த
பழமையையும் அப்படியே
போற்ற வில்லை;
ஈதுநலம் செய்யுமெனத்
தெளிந்தவற்றை ஒன்றாக்கி
இணைத்துக் கொண்டாய்;
‡ சேதுமன்னர் பரம்பரை நீ
ஆதலினால் பாலமெனத்
திகழ்ந்தாய் போலும்.

## வேறு

திருக்கமலத் தார் பார்வை
தீராதாய் என்றாலும்
திருக்கமலத் தார் பார்வை
தீநஞ்சா வெறுப்பாய் நீ.

கூடுமடி யார்க் காணின்
குலவிமகி ழும் நீயே
கூடுமடி யார்க் காணின்
கோபத்தாற் கண் சிவப்பாய்.

† இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் அமைந்தது சேது என்னும் பாலம். சேது மன்னர் பரம்பரையில் வந்ததனால் பழமைக்கும் புதுமைக்கும் பாலமானாய்.
* திருக்கமலத்தார் — இலக்குமி. திருக்கு + அ + மலத்தார் — வஞ்சனையாகிய அக்குற்றத்தினையுடையவர். கூடுமடியார் — கூடும் + அடியார்; கூடு + மடியார் = மிகுந்த சோம்பேறிகள்.

* முகவைத்தாய் பெற்றெடுத்த
முழுமதியே! நீயன்றோ
முகவைத்தாய் தமிழுக்கு;
முகவரியும் நீவைத்தாய்.

‡ மடங்கலென வாழ்ந்தவர்கள்
மன்னுலகிற் பலரிருக்க
மடங்கலென எழுந்தவர்யார்?
மாதமிழைக் காத்தவர்யார்?

O வாயிலராத் தமிழரெலாம்
மயங்குகையில் தமிழ்க்கோயில்
வாயிலராய் நீ நிமிர்ந்து
வருபகையைக் கடிந்தாயே!

† பூவிருந்து வீணாளாப்
போக்கியவர் பலரிருக்கப்
பூவிருந்து நாளுந்தேர்
வண்டாகிப் பொலிந்தனையே

** புலமுடையா ராகிமயற்
பொன்றியவர் மத்தியிலே
புலமுடையார் நட்புரிமை
போற்றியநின் புகழ்சொலவோ?

* முகவைத்தாய் = முகவை என்னும் தாய்; முகம் + வைத்தாய்
‡ மடங்கலென. மடம் + கல் + என, சிங்கமென, O வாயிலரா— வாய் + இலரா. பேசவாயில்லாதவராகி. வாயிலர்— வாயிற்காவலர்
† பூவிருந்து— பூ + இருந்து. பூமியில் இருந்து; பூ + விருந்து. பூவில் விருந்து ‡ புலமுடையார்— புலம் + முடையார்— அறிவு வறுமையுற்றோர். புலம் + உடையார்— அறிவுடையோர்



*ஆசரியு மன்னை புகழ்
எனவறியார் மத்தியிலே
ஆசரியு மன்னனென
ஆனவர் யார் நின்போலே

வானடையாற் சிறப்புற்று
வையத்து மாந்தருளே
வானடையாத் தேவரென
வாழ்ந்த புகழ் வாழ்த்துகிறேன்

## வேறு

‡கழலையினால் துன்புற்றுக்
கண்கலங்கி நின்றேன் நான்;
கடிது வந்தாய்;
†அழலை விடு! யானுள்ளேன்;
அஞ்சாதே எனத் தேற்றி
ஆண்டு முற்றும்
முழுவளவில் ஊதியமும்
விடுப்புடனே எற்களித்த
செயலை முன்னின்
எழுபிறவி இப்பிறவி
எல்லாமே நின்புகழே
என்நா பாடும்.

* ஆசரியும்— ஆ! + சரியும், ஆசு + அரியும் — குற்றத்தைக் களையும்
‡ கழலை— கட்டி. † அழலை— அழுதலை.

பாடுகின்றேன். பைந்தமிழ்நா
டுளமட்டும் வாழ்கவெனப்
பாடும் போது
வாடுகின்றேன் ஒருகாட்சி
என்னெஞ்சை வருத்துவதால்;
என்னென் பாயேல்
மூடுகின்ற புண்ணுக்குள்
முட்டுகின்ற கீழ்போலத்
தமிழர் வாழ்வில்
ஊடுருவும் அயல்வழக்கே
உறுத்ததனால் என்னெஞ்சம்
ஒடுங்கிற் றையா!

முகவைநகர் வருகையில்நான்
முன்வாழ்ந்த மதுரையினைக்
காண முன்னி
அகமகிழ்ந்து நகர் சென்றேன்;
அங்குள்ளார் நடையுடையால்
அதிர்ந்து போனேன்;
நகர்பெரிதாய் நாகரிகம்
சிறிதாகி நலிவுறுதல்
கண்டு நைந்தேன்;
வகைவகையா வணிகர்களின்
விளம்பரங்கள் காணுதொறும்
வருந்தி நின்றேன்



'பாண்டா'வும் 'பாப்புலரும்'
'பைனான்சு'ம் 'பார்மசி'யும்
உருத்துப் பார்க்க,
'டான்டெக்சு'ம் 'மிட்லண்டு'ம்
'சன்பிராண்டு'ம் 'ஐஸ்பாரு'ம்
தைதை என்ன,
லாண்டரிகள் ஒட்டல்கள்
லாட்டரிகள் பாட்டரிகள்
லாமி னேசன்
†ஆண்டிருக்கும் விளம்பரத்தில்
ஆண்டிருக்கும்; என்னஇது
தமிழர் நாடா?

அம்மாக்கள் மம்மிகளாம்
அப்பாக்கள் டாடிகளாம்
அழைக்கக் கேட்டு
சும்மாகள் உண்டாற்போல்
சொக்குகிறார்; சுழலுகிறார்
மூடப் பெற்றோர்;
எம்மாநி லத்தவரும்
எள்ளிநகை யாடவரும்
இழிவை எல்லாம்
தம்மாலே தாம்சுமக்க
முடியுமெனக் காட்டிநிற்போர்
தமிழ ரானார்.

† ஆண்டிருக்கும்—அங்கே இருக்கும், ஆட்சி செய்து கொண்டிருக்கும்.

மதிசுமக்கும் முகமிருக்கும்;
மலர்சுமக்கும் இதழிருக்கும்;
மழலை யர்கள்
பொதிசுமக்கும் கழுதைகள்போல்
புத்தகங்கள் குறிப்பேடு
சுமந்து போகும்
கதிஇவர்க்கு வரலாமா?
கல்விஎன்றால் இதுதானா?
கல்வி என்றால்
அதிசுவையா இருந்தது போய்
அதிசுமையா இருக்குமென
ஆயிற் றந்தோ!

பின்முதுகில் பைசுமந்து
பேருந்தில் ஏறுதற்கு
வரிசை யாக
முன்செலுங்கால் துப்பாக்கி
முனையினிலே கருப்பர்களை
அடிமை யாக்கித்
தன்னாடு கொடுசென்ற
அடிமைகளின் அணிவகுப்பைத்
தான்நான் கண்டேன்;
இன்னுமென்ன? இதுவுமொரு
அடிமைகளின் அணிவகுப்பே
என்றால் பொய்யா?



ஆடையிலே தமிழில்லை;
ஆலயத்தில் தமிழில்லை;
ஆடிப் பாடும்
மேடையிலே தமிழில்லை;
மெட்டுகளில் தமிழில்லை;
மேலே செல்லப்
பாடையிலே போனவனின்
பதினாறாம் நாட்சடங்கும்
தமிழில் இல்லை;
கோடையிலே வாடுகின்ற
கொழுந்திலைபோல் தமிழன்னை
குலைகின் றாளே!

அன்றொருநாள் தமிழகத்தின்
அரசியல்மா நாட்டினிலே
நீய றைந்தாய்;
இன்றுமென்றன் செவிகளிலே
இசைத்துக்கொண் டிருக்கிறது;
'எவரா னாலும்
தன்மொழிமேற் பற்றின்றித்
தன்னாட்டிற் பற்றுவைத்தல்
தகத கக்கும்
பொன்னணிகள் அணிந்தாடை
புனையாமல் தெருவழியே
போதல் போலாம்'

அன்றுரைத்த நின்மொழியை
அளவுகோ லாக்கிநான்
அளந்து பார்த்தால்
இன்றுபலர் இடையுடுத்தா
நிர்வாண மனிதர்களாய்
என்கண் கட்குத்
தென்படுகின் றார்; இதனைத்
தீர்த்தவர்தம் இடுப்பினிலே
துணியைக் கட்ட
முன்வருவார் யாவருளர்?
*முன்னுதொறும் துன்பத்துள்
மூழ்கு கின்றேன்.

பண்பாடு நாகரிகம்
படும்பாடு திருத்தமனம்
பதியா ராகித்
தன்பாடு தன்வயிற்றுப்
பாடுபெரி தெனவானார்
தமிழ ரெல்லாம்;
முன்பாடும் பாடகனாய்
மூத்தகுடிப் பிறந்தவர்கள்
அயல வர்க்குப்
பின்பாடும் நிலையுற்றார்;
பிழைபாடு நீக்கவொரு
வழிசொல் வேன்கேள்.

*முன்னுதொறும்—நினைக்குந்தொறும்.



ஈங்கிருக்கும் தலைவரெலாம்
இக்குறைகள் நீக்குவதற்
கியலார் ஆனார்;
ஓங்கிவளர் இக்குறையை
ஒழிப்பதெனில் உன்னைப்போல்
ஊக்கம் மிக்குத்
தூங்காதே வினைசெய்யும்
துணிவுடையார் தோன்றுவரேல்
தமிழர் கட்கோர்
‡ஆங்காலம் பிறந்திடலாம்
ஆதலினால் ஆசைபற்றி
அறைகின் றேன்யான்.

மீண்டுமொரு பிறவியினை
மேற்கொண்டு வந்துவிடு;
வந்து விட்டால்
பூண்டுமதன் சிறுவேரும்
இல்லாமற் போக்கிடுவாய்;
புகழ்செ ழித்த
நீண்டபழந் தமிழ்வாழ்வு
மீண்டுமிங்கே நிலைகொள்ளும்;
நீயும் கூடத்
தாண்டுமொரு நூற்றாண்டும்
தான்கழிய எந் நாளும்
தமிழ்போல் வாழ்வாய்.

‡ஆங்காலம்—ஆகுங்காலம்—நற்காலம்.

*பறம்பு மலையில் நடைபெற்ற*
*பாரி விழாவில் பாடப்பட்டது.*

# ௦ பாரியும் பறம்பும்

காரளித்த கையுடையான்;
கலையளந்த நெஞ்சுடையான்;
கருதும் முந்நூறு
ஊரளித்த பெருங்கொடையான்;
உயிரளித்த சிறப்புடையான்
கபிலன் பாட்டிற்கு;
யாரளித்த திக்கொடைதான்
எனவழியில் கேட்பார்க்கு
நறுமுல் லைக்குத்
தேரளித்த பாரிவள்ளல்
செய்தளித்தான் எனச்சொல்லும்
சீர்த்தி மிக்கான்.



வாட்டுகின்ற பசிப்பிணியால்
வருந்திவரு வோர்க்கெல்லாம்
அன்ன வாசல்;
மீட்டுகின்ற யாழெடுத்து
மிகுபுலமைத் திறலுடைய
கவிக்கு யில்கள்
வேட்டெழுந்து வந்திடுமேல்
விரும்பிவர வேற்கின்ற
வேடன் தாங்கல்;
காட்டகத்து வெண்முல்லைக்
கவிஞனுக்கும் சிறப்புகளை
வழங்கும் தேரூர்.

வளர்ப்பவர்க்குப் பிள்ளைவிடும்
வழக்கத்தை இவன்தொடக்கி
வைத்தான் போலும்;
களைப்பறியா வாழ்க்கையினைப்
பாரியுற்ற துன்பத்தாற்
கையி ழந்து
மலைப்புற்று நிற்கையிலென்
மக்களைநீ காக்கவென
மலையி ரண்டைத்
தலைச்சுமத்தி வைத்தானே!
தமிழ்க்கபிலன் பட்டதுயர்
தாங்கொ ணாது.

திறமைக்குப் பரிசுதரல்
பாரிவள்ளல் குறியன்று;
தீயாய்ப் பற்றும்
வறுமைக்குப் பொருள்தரலே
வாழ்க்கைநெறி எனக்கொண்டான்;
கபிலன் பாட்டில்
பெருமையிலா எருக்கினையும்
இறைபேணத் தவறுகிலான்
என்ற பேச்சின்
பொருளென்ன? கடைக்கோடி
மனிதனையும் இவன்புரத்தல்
கழறத் தானே!

முல்லைக்கும் மல்லிகைக்கும்
பந்தலிட்டு முன்காக்க
முனைவோர் உண்டு;
கொல்லைக்குள் சாமந்திக்
குறுஞ்செடிக்கு நீர்வார்த்துக்
கொள்வார் உண்டு;
எல்லார்க்கும் வெறுப்பளிக்கும்
எருக்கிற்கு நீர்வார்க்க
எவர்நி னைத்தார்?
நல்லோர்க்குள் நல்லனிவன்
ஆதலினால் எருக்கனையார்
நலம்பெற் றுய்ந்தார்.



இரங்கத்தக் கார்க்காணின்
இருவிழிகள் அருள் சொரியும்;
இசைந்த செம்பொற்
சுரங்கத்தைத் திறந்தது போல்
சுடர்க்கைகள் பொன்சொரியும்;
சூழ்ப கைக்கோ
உரங்கொத்தும் வெங்கணையோர்
ஆயிரத்தை வில்சொரியும்;
இவற்கு நேராச்
சரஞ்சரமா நீரொன்றே
சொரிகின்ற அம்மாரி
சரியோ? இல்லை.

தொடுங்குன்றம் விண்ணைப்போய்;
தமிழ்க்குடிவாழ் தொல்குன்றம்;
புகழ்து லங்கும்
நெடுங்குன்ற மாயிருந்து
நிகழ்வுகளால் உருமாறிக்
குன்றிக் குன்றிக்
‡கொடுங் குன்றம் என்றபெயர்
கொண்டதுமேன்? பாரிக்குக்
கொடுமை நேர
இடம் குன்றம் ஆனதனால்
கொடுங்குன்றம் ஆனதுவோ?
இசைப்பீர் ஐயா!

‡ பறம்புமலைக்குப் பிற்காலத்தில் கொடுங்குன்றம் என்பது பெயர்.

தண் பறம்பு நன்னாடாம்;
தமிழ்க்கபிலன் மொழியறிவீர்;
தாவிச் செல்லும்
கண்வரம்பு படும்வரைக்கும்
பசுமைதரும் காட்சியிலை;
கபிலன் சொன்ன
தண்மையிலை; பறம்புண்டு;
நன்மையிலை. நாடுண்டு;
தக்கோன் பாரி
விண்வரம்பு பட்டமையால்
வீழ்பறம்பாய்ப் போனதுவோ
விளங்க வில்லை.

ஒருநிழலும் இல்லாத
நெடுவழியில் வருபவருக்கு
உதவும் நீழற்
பெருமரத்தைத் தனிமரத்தைப்
பெருவேந்தர் கொன்றார்கள்;
இன்றும் கூடச்
சிறுமரமும் ஈங்கில்லை;
எதனாலே இந்தநிலை
இம்மூ வேந்தர்
வருமரபில் வந்தவர்கள்
மரம்வெட்டும் பழந்தொழிலை
மறவா மைதான்.



பழந்தூங்கும் பழமரமாம்
பாரியினை ஏன் கொன்றார்?
பண்பி னாலே
அளந்தறிய முடியாத
அவன் மகளிர் மணம்வேட்ட
அரசர்க் கெல்லாம்
உளந்திகைக்க மறுத்தானே
அம்மறுப்பும், மூவேந்தர்
உயர்ச்சி சொல்லும்
பழம்புகழைப் புதுப்புகழால்
பாரிஅழித் தானென்ற
பகையுந் தானே!

வீரத்தாற் பழந்தமிழர்
வீழ்ச்சிக்கே செய்தவற்றை
விரித்து ரைத்தால்
ஈரத்தால் கண் நனையும்;
இதயத்தில் தீபற்றும்
எனினும் இங்கே
கூறத்தான் வேண்டுமதைக்
குமரியினைப் பெண்கேட்கக்
கொடாஅர் ஆயின்
ஊரைத்தான் எரிப்பதுவும்
உற்றவரைக் கொல்லுவதும்
உயர்வு தானா?

* மருவாரும் குழலாளை
வேட்டவர்க்கு 'மகள்மறுத்தல்'
'மகட்பாற் காஞ்சி'த்
துறைகாட்டும் புறப்பாடல்
இருபதினும் மேலிருத்தல்
சொல்வ தென்ன?
ஒருதாலி பூட்டுதற்கா
ஓராயி ரந்தாலி
அறுத்தார் என்றல்
பெருவீர மாகாது;
பேரறமும் ஆகாது;
பிழையே யாகும்.

வீரமொரு நற்பண்பே
மெய்யேதான் பொய்யில்லை;
அவ்வீ ரத்தை
ஈரமின்றிச் செலுத்துங்கால்
எய்துகின்ற பேரழிவை
என்ன சொல்ல!
நாறுமகிற் குழலாளை
நயந்துமணம் வேண்டுபவர்
நயன்மை இன்றி
ஊரெரித்தல்; நாடழித்தல்;
உடன்பிறந்தார் தமையழித்தல்
ஊக்கி நின்றார்.

* மருவாரும்—மணமிகுந்த



தன்குடும்பத் தாரழிவைத்
தானெண்ணி அழுவாளா?
சமருள் வென்று
‡ முன்வரைய வருவானின்
முகம்பார்த்துச் சிரிப்பாளா?
ஐயோ! இந்தப்
பெண்பிறந்து பட்டதெலாம்
பெருந்துயரே யல்லாமல்
பேசற் கிங்கே
என்னுளது? பாரியவன்
இல்லத்தும் நடந்தகதை
இதுவே தானே!

அங்கவையைச் சங்கவையை
அந்தப்பு ரம்வைக்கும்
ஆசை யால்தான்
இங்குபெரும் போரெழுந்த
தெனும்குறிப்பை இசைக்கிறதே
கபிலன் பாடல்;
பொங்கிவரும் செங்குருதிப்
புதுக்குளத்தின் நடுவினிலே
வாழ்க்கைப் போது
திங்களென மலர்ந்திடுமா?
மலர்ந்தாலும் தேன்துளிகள்
சிந்தல் உண்டா?

‡ வரைய—திருமணம் செய்துகொள்ள

பெண்ணுக்காப் போர்நடத்தல்;
பெருமைக்காப் போர்நடத்தல்
பெரிய தான
மண்ணுக்காப் போர்நடத்தல்
என்பதெலாம் மதித்தறிந்தால்
மனித நேயக்
கண்ணுக்குள் அம்புவிட்டுக்
கருவிழியைப் பாழாக்கி
என்றும் ஆறாப்
புண்ணுக்கு வழிசெய்த
தல்லாமல் புகழுக்கா
வாழ்வ ளித்தார்?

பிணங்குவிந்த போர்க்களத்தின்
பேரிரக்கக் காட்சிபல
பீடித் தாட்ட
மனங்கசந்த ‡மார்க்கண்டன்
மண்மகளின் கூற்றாக
வடித்தான் பாடல்;
பணங்கொடுப்போ னுடனெல்லாம்
படுக்கையறை செல்கின்ற
பரத்தை யைப்போல்
அணங்கவரும் வேலெடுத்த
அரசர்களின் வைப்பாட்டி
யாகின் றேனே!

‡மார்க்கண்டன்-புறநானூற்றில் 365-ஆம் பாடலைப் பாடிய புலவர்
'விலைநலப் பெண்டிரின் பலர்மீக் கூற
உள்ளேன் வாழியர் யானெனப் பல்மாண்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டென உரைப்பரால் உணர்ந்திசி னோரே'



என்றழுதாள் நிலமகள்தான்
என அழுதான் மார்க்கண்டன்;
எதற்கோ என்றால்
கொன்றழித்துச் சாம்தமிழக்
குமுகாயம் வாழ்வுபெறும்
குறிக்கோள் கொண்டு
இன்றுமுதல் திருந்தாதா?
எனஎழுந்த ஆசையினால்;
இன்றும் கூட
அன்றழுத மார்க்கண்டன்
ஆசைநிறை வேறவிலை;
அதுதான் உண்மை,

விலைமகளா நிலமகளை
விரும்புகின்ற போரொழித்தும்,
உயிர்கள் வாழத்
தலைமகளாம் நிலமகளின்
தாள்பணிந்து வாழ்த்துவதும்;
தக்கோன் பாரி
கலைமலிந்த வாழ்க்கை நெறிக்
கண்ணியத்தைப் போற்றுவதும்
செய்யின் இந்த
மலைவளமும் நாளையிங்குப்
பெருகிவரும்; வாய்மையிது!
மறக்க வேண்டா.

காரைக்குடி இந்து மதாபிமான சங்கக்
கட்டடத்தில் நடந்த
தமிழ்க்கடல் இராய சொக்கலிங்
கனார் இரங்கற் கூட்டத்தில்
பாடப்பட்ட கையறு நிலைப்பாடல்

# 10 தமிழ்க்கடல் இராய. சொ

காற்றானாய் வெளியானாய்
கனலானாய் புனலானாய்
கல்மண் ஆனாய்;
நேற்றானாய்; நிழலானாய்;
நீங்ககிலா நினைவானாய்
நெஞ்சந் தோறும்;
நேற்றாகி நிழலாகி
நெஞ்சுதொறும் நினைவாகி
நிறைந்த தாலே
ஊற்றாகி இருவிழியும்
ஒய்ந்ததற்பின் உதிரநீர்
ஒழுக வைத்தாய்



ஊற்றெழுந்த விழியினராய்
உன்மைந்தர் புலம்பியழு
துரத்துக் கூவி
ஆற்றகிலாப் பெருந்துயரால்
ஐயாவோ! ஐயாவோ
என்றே ஆர்த்தார்;
ஆற்றகிலாப் பெருந்துயரால்
'ஐயாவோ' எனஅரற்றும்
அவர்வாய்ச் சொல்லைக்
காற்றெடுத்து நின்செவியிற்
கழறுவதும் கேளாமே
கடந்த தன்னோ?

மூவர்க்கும் முன்தோன்றி
முளைத்ததமிழ் விளைத்தசுவை
முழுதும் வானத்
தேவர்க்கும் ஊட்டுதற்குச்
சென்றனையோ? வாசகத்தின்
தேனெ டுத்து;
தேவர்க்கும் வாசகத்தேன்
ஊட்டுதற்குச் சென்றிலையேல்
‡தீரா மம்மர்
யாவர்க்கும் வழங்குவையோ?
இனியசெயும் நாகரிக
இயல்பின் மிக்கோய்!

‡தீராமம்மர்—தீராதமயக்கம்.

பண்திறந்து விட்டதெனப்
பழம்பாடற் சுவையமுதம்
பாய்ச்சிப் பாய்ச்சிக்
கண்திறந்து விட்டனையே!
கலக்கமெலாம் ஒழித்தனையே!
களிசெய் தாயே!
கண்திறந்து விட்டநினைக்
காணுவதற் கிமைக்கதவம்
திறந்த காலை
மண்திறந்து படுத்தனையே!
மதிகலங்க வைத்தனையே!
மயங்கு மாறே!

மண்ணறியும் உன்னடியை;
மனமறியும் உன்னினைவை;
மறக்கி லாஎன்
கண்ணறியும் உன்னுருவைக்
காதறியும் உன்புகழைக்
கால மெல்லாம்;
கண்ணறிவ துன்னுருவாக்
காதறிவ துன்புகழாக்
கண்ட பின்னும்
புண்ணெறிவு பட்டாற்போல்
புலம்பிமனம் மாழ்குவதேன்
புகல்வாய் ஐயா!



அருந்தேனை அமுதத்தை
ஆக்குபவன் என்பதனை
அறிந்த கூற்றம்
விருந்தமுதம் அருந்திடவும்
வீவில்லா நிலைபெறவும்
விழைந்தான் போலும்
விருந்தமுதம் அருந்திடவும்
வீவில்லா நிலைபெறவும்
விழைந்த தாற்றான்
பெருந்துணையா உனைக்கொண்டு
தன்னலத்தாற் பிழைசெய்து
பெயர்ந்தான் போலும்.

கடல்எழுந்து நிலத்தையுணும்
கதைமுன்னர்க் கேட்டுள்ளோம்;
கடலை யும்மோர்
திடல்எழுந்து விழுங்குமெனல்
தெரியகிலேம்; அதையின்றுத்
தெரிந்து கொண்டேம்;
திடல்கடலை விழுங்கிடினும்
கடலினைமண் தீர்த்திடினும்
தீராத் துன்பம்
படுவதெலாம் தமிழர்களே
என்னுமொரு படரன்றோ
படுத்த தெம்மை!

---

திருவாசகத்தேன், ஆழ்வார் அமுது என்பன இராய.சொ அவர்கள் எழுதிய நூல்கள். வீவில்லா—சாவில்லாத திடல்—மேட்டுநிலம்; இங்குச் சுடுகாட்டை உணர்த்திற்று. படர்—துன்பம்.

கறவையினை இழந்தவனக்
கட்டுதுறை காணுதொறுங்
கலங்கு மாபோல்
நிறைகுடமே! நீயிருந்த
நெடுமாடம் காணுதொறும்
நெஞ்சம் மாயும்;
நிறைகுடமே! நீயிருந்த
இடங்கண்டு நெஞ்சுணங்க
நேரும் போது
†உறைபெயலாக் கண்பொழிய
உளந்தேற்றி உரைப்பதற்கோ
ஒருவற் காணேன்.

திங்கள்நேர் காரைமகள்
திருநுதலின் பொட்டிழந்தாள்;
கலையின் தெய்வம்
துங்கமணி நாணிழந்தாள்;
இலக்கியத்துத் துய்யமகள்
கைம்மை துய்த்தாள்;
துங்கமணி நாணிழக்கத்
துய்யமகள் கைம்மையுறத்
தோன்று மாயின்
சங்கமுறை எம்மவரைச்
சலித்ததுயர் எந்தவணம்
சாற்று கேனோ?

† உறைபெயல்—அடிமழை. சங்கமுறை எம்மவர்—இந்துமதாபிமான சங்கத்தைச் சார்ந்த எம்நண்பர்கள்.



ஓவியத்தில் இருக்கின்றாய்;
உணர்வுகளில் தவழ்கின்றாய்;
*உரவோர் செய்யும்
காவியத்தில் நிற்கின்றாய்;
கட்டுரைப்பார் நாவினிலும்
கமழ்கின் றாயால்;
காவியத்தில் கட்டுரையில்
கமழ்கின்றாய் கண்டபின்னும்
கலங்கும் நெஞ்சம்
‡சாவியலூர் சென்றியெனச்
சாற்றுவதை எவ்வணம்யாம்
சகிப்போம் ஐயா!

எழுதிவந்த பாடலைத்தான்
இப்பொழுது முடிக்கின்றேன்;
இதய மின்னும்
அழுகையினை முடிக்கவில்லை;
அவலமெனும் கரியஇருள்
அகல வில்லை;
அழுகையினி மறைந்தாலும்
அவலஇருள் கரைந்தாலும்
அன்பு கொண்டேம்
தொழுதகைய ராயுன்றன்
○துலையில்லா நெடும்புகழே
துதித்து நிற்பேம்.

*உரவோர்—அறிவுடையோர். ‡சாவியலூர் — கூற்றுவனின் ஊர் · சென்றி—சென்றாய்; ○துலையில்லா—ஒப்பில்லாத.

*காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வள்ளல் அழகப்பர் நினைவு நாள் அரங்கில் பாடப் பெற்றது.*

## 11 வள்ளல் அழகப்பர்

அழகப்பா நின்கொடையின்
அமுதப்பால் உண்டதனால்
அன்றோ நாங்கள்
முழவைப் போல் எம்நாவால்
முழக்குகிறோம் நின்புகழை;
அறியா மாந்தர்
பழகப்பால் புளிக்குமென்றார்;
பழையகதை; உன்புகழைப்
பாடப் பாட
‡கழகப்பா போல் நாவில்
*கழறுதொறும் நல்லின்பம்
கனிவ தென்ன?

‡ கழகப்பா— சங்க இலக்கியப் பாடல். * கழறுதொறும்— சொல்லுந் தொறும்.



‡இன்றுமுழு நிலவின்நாள்
வானத்தில்; இந்நிலவே
நாளை தேயும்;
அன்றுநீ நிறைசெல்வன்
கொடையாலே அதுதேய்ந்தாய்;
அதனா லென்ன?
நின்றபொருள் தேய்பிறையா
நீள்புகழோ வளர்பிறையா
நிறைந்தாய் அன்றே!
இன்றுமுழு நிலவின்நாள்;
வானத்தில் மட்டுமில்லை;
வையத் தும்தான்.

பல்கலைக் கழகத்தின்
பாதைதொறும் இன்றுநாம்
கண்ணால் பார்த்தால்
நல்லறிஞர், பல்கலைஞர்
நாடுபொறி இயல்வல்லார்
நடத்தல் காண்போம்;
கல்விவலீர்! *நாற்பதுகள்
கடைசியிலே இங்குநாம்
கண்ட தென்ன?
கொல்லரவும் குறுநரியும்
பாதைதொறும் குறுக்கிடுமோர்
கொடுமை தானே!

‡இந்நினைவு நாள் நிகழ்ச்சி நடந்தது முழு நிலவு நாளில். *1947-இல் அழகப்பர் கல்லூரி தொடங்கப்பட்டது. அப்பொழுது இந்த இடம் அடர்ந்த காடாக இருந்தது.

விலங்குகளின் பாதைகளை
வீதிகளா மாற்றியதும்,
முள்ள டர்ந்து
குலுங்குகின்ற காடு, கலைக்
கோயில்களாப் புதுக்கியதும்,
வனத்தைக் கொன்று
நிலங்கெடுக்கும் களையகற்றிக்
கலையை நிலை நிறுத்தியதும்
எவர் தம் கைகள்?
புலங்குளிரக் கொடை வழங்கும்
அழகப்ப வள்ளலவன்
பொற்க ரங்கள்.

காடு வெட்டிப் போடுவதும்
கடிய நிலம் திருத்துவதும்
கலைம லிந்த
வீடுகட்டிக் கொள்ளுவதும்
வேள்வணிகர் செயலென்றான்
†விளங்கு மேலோன்;
காடு வெட்டிப் போட்டாய் நீ
கடிய நிலம் திருத்தினை; ஆம்!
உனக்கென் றேயோர்
வீடுகட்டிக் கொளவில்லை;
கலைமகளுக் கேவீடு
கட்டு வித்தாய்.

† விளங்கு மேலோன்— பாடுவார் முத்தப்பர்.அவர் பாடல்வருமாறு:-
காடு வெட்டிப் போட்டுக் கடிய நிலம் திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்— வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு.



‡வட்டார இளைஞரெலாம்
வளமான கல்விகற்று
வாய்ப்பும் பெற்றுக்
கிட்டாத உயர்பதவி
எளிதாகக் கிடைத்தவராய்
விளங்கு கின்றார்;
எட்டாத உயர்வுடையார்
இருப்பதெதில்? நாற்காலி
இருக்கை மீதா?
மட்டாரும் பெருங்கொடைஞன்
அழகப்பன் கொடைமீது
மறக்க வேண்டா!

நிலவளங்கள் நீர்வளங்கள்
நிலத்தடியின் கனிவளங்கள்
என்றிவ் வாறாப்
பலவளங்கள் இருந்தாலும்
†மனிதவளம் இல்லையெனில்
பாழாம் என்று
நலமுணரும் அரசாங்கம்
நன்குணர்ந்து கொண்டதின்று;
நீயோ அன்றே
தொலையுணரும் ஆற்றலினால்
மனிதவளம் தோற்றுவிக்கத்
தொடங்கி விட்டாய்.

‡வட்டார— காரைக்குடிவட்டார. மட்டு ஆரும்—எல்லை நிறையும்.
†மனிதவளம்- - மனிதனின் அறிவுவளம். கல்வித்துறையைத்தற்பொழுது
மைய அரசு மனிதவளமேம்பாட்டுத்துறை என மாற்றியுள்ளது

கடையேழு வள்ளல்களை
இலக்கியங்கள் காட்டிநிற்கும்;
அவரின் உன்றன்
கொடையேழு மடங்கன்றோ?
அவரெல்லாம் குடற்பசிக்கே
* கொடுத்து வந்தார்;
தடையேதும் இன்றிஅறி
வுப்பசியைத் தணிக்கநீ
உணவு தந்தாய்;
கடையேழு வள்ளல் போய்க்
கடையெட்டு வள்ளலெனக்
† காட்ட நின்றாய்.

தன்னாட்டு மக்கள்துயர்
தாங்குகின்ற பொறுப்புடைமை
தமதென் றெண்ணி
அந்நாளை அரசர்களோ
அரசுரிமை பெற்றதன்பின்
வள்ளல் ஆனார்;
மின்னாமல் முழங்காமல்
மேகமெனக் கொடைபொழிந்த
மிகுதி யாலே
எந்நாளும் அரசனென
இங்குள்ளார் இதயமெலாம்
இருக்கின் றாய்நீ.

* கொடுத்து வந்தார்—கொடுத்து + உவந்தார். † காட்ட—எடுத்துக் காட்ட



கோட்டையில்லை; வெண்கொற்றக்
குடையுமில்லை; குடிமக்கள்
இல்லை; எந்த
நாட்டையுமே ஆளவில்லை;
அரசனென நவில்வதென்ன?
என்று கேட்பீர்;
கோட்டையூர் ஊராகக்
குளிர்கருணை குடையாகப்
*பயில்வோர் எல்லாம்
‡நாட்குடியா இங்கிருக்க
நல்லாட்சி நடத்துவதால்
அரசன் என்பேன்.

†இடிப்பதுதான் முதல்வேலை;
இராமனுக்கு நற்கோயில்
எடுத்துக் கட்டி
முடிப்பதுதான் மறுவேலை
என்றொருநாள் முடித்தார்கள்
மனித நேயம்;
இடிப்பதிலே மனிதமில்லை;
யாவர்க்கும் பயன்படத்தான்
இருந்த வீடும்
கொடுப்பதுதான் மனிதமடா
எனவகுத்த நின் கொள்கை
ஏன்மறந்தார்?

* பயில்வோர்— பல்கலைக் கழகத்தில் பயில்வோர். ‡ நாட்குடி நிரந்தரக் குடிமக்கள் அல்லாதார், ஓராண்டு ஈராண்டு மட்டுமே பல்கலைக் கழக வளாகத்தில் தங்கியிருப்போர்,

† பாபர்மசூதி.

தான் குடியிருந்த வீட்டையே பெண்கள் கல்லூரி தொடங்கக் அழகப்பர் கொடுத்தார்.

கங்கையிங்குப் பாயவில்லை;
காவிரியும் காரைநகர்
காண வில்லை;
பொங்குபெருந் தொழில்வளங்கள்
பூக்கவில்லை என்றாலும்
இந்தப் பூமி
தங்குபெரும் நலமெல்லாம்
தான்பெற்ற தெவ்வாறு?
அழகப் பன்றன்
செங்கைபொழி கொடையாறு
பெருகியதன் செழிப்பன்றோ
இச்செ ழிப்பு.

கொடைவிளங்கும் இவன்கையில்;
குலம்விளங்கும் வாணிகத்தில்;
கொள்கை சான்ற
நடைவிளங்கும் வாழ்க்கையிலே;
நல்லறிவு விளங்குமவன்
செயலில்; தேர்ந்த
படைவிளங்கும் ஆளுமையில்;
பண்பாடு விளங்குமவன்
சொல்லி லெல்லாம்;
தொடைவிளங்கும் ஒருமாலை
இவன்போல மானுடந்தான்
தொகுத்த தில்லை.



தென்னை மட்டை கூடத்தான்
தோன்றியதன் அடையாளம்
திகழு மாறு
முன்னிருந்த இடத்தினிலோர்
அடையாளம் வைக்கிறது;
முதிர்கொ டைஞ!
பின்வருவார் அறியும் வணம்
நீவைத்த அடையாளம்
பேசப் போமோ?
மண்ணிருக்கும் வரைஎங்கள்
மனமிருக்கும் வரைஇருக்கும்
மறக்க கில்லோம்.

*மறைமலையடிகள்*
*நூற்றாண்டு விழாவிற்காகப்*
*பாடப்பட்டது.*

# 12 மறையா மலையா? மறைமலையா?

எதுநெறி என்றே அறிகிலாப் போதில்
    எதிர்வரும் ஒளிமலை யானாய்;
‡மதுநெறிக் குள்ளே அயலவர் நம்மை
    மாட்டிட எரிமலை யானாய்;
'இதுநெறி' என்றே நறுந்தமிழ் மொழியில்
    இசைக்கையில் பனிமலை யானாய்;
'புதுநெறி தந்தாய்! உளந்தொறும் நின்றாய்
    புகழ்மலை ஆயினை ஐயா!

ஔப்புரி யாரும் எளிதினிற் புரிவான்
    இருந்தமிழ் வழக்கினைத் தொகுத்தாய்;
முப்புரி யாரால் இத்தமிழ் நாட்டில்
    முளைத்துள கேட்டினை அழித்தாய்;
செப்பரி தான செந்தமிழ் வாழச்
    செய்தனை; செஞ்சடை மீதில்
*அப்புரி யானின் திகழ்ந்தனை; இம்பர்
    ஆக்கலும் அழித்தலும் புரிந்தே!

‡மதுநெறி—மயக்கநெறி. ஔப்புரியாரும்—எத்தகைய புரியாதவரும்.
*அப்புரியானின்—சடையில் கங்கையைத் தாங்கிய சிவன் போல்



எதிர்ப்புகள் எல்லாம் கொடுவெயி லாகி
    எரித்துனைத் தாக்கிய போதும்,
அதிர்ப்புறும் வண்ணம் பெருமழை யாகி
    அரித்திட மோதிய போதும்,
விதிர்ப்புறும் புயலாய் வீறுடன் எழுந்து
    வீசியே சாடிய போதும்
மதர்ப்புடன் நிமிர்ந்தாய் எதிர்ப்பவர் அண்ணா
    மலையென நின்றனை ஐயா!

நாடெலாம் சுழன்றாய்; நலமெலா முணர்ந்தாய்;
    நம்மவர் வாழ்முறை கூறும்
ஏடெலாம் பயின்றாய்; எங்கணும் மொழிந்தாய்;
    இயங்கிடு நூலக மானாய்;
வாடலாம் காலம் வந்ததே எமர்க்கு!
    வையக வாழ்வுநீ துறந்தாய்
ஆடவன் ‡இலிங்கி செட்டியின் தெருவில்
    அமர்ந்திடு நூலக மானாய்.

செந்தமிழ் கமழும் சந்தனச் சாரல்
    சிறந்திடும்; தனித்தமிழ் குதித்து
வந்திடும் அருவி வயங்கிடும் ஒருபால்;
    வளர்ந்திடும் சிந்தனை மரங்கள்
முந்திவிண் தடவி மூண்டெழும் ஒருபால்;
    முடிவிலா ஏரணக் கொடிகள்
வந்திடை மிடைய வளர்தரு சாரல்
    மன்னிய பொதியில்நீ ஐயா''

அண்ணாமலை—நெருங்கமுடியாத மலை. வாடலாம் காலம்—துன்பக் காலம் ‡சென்னை இலிங்கி செட்டி தெருவில்தான் இன்று மறைமலையடிகள் நூலகம் அமைந்துள்ளது. மிடைய—நெருங்க.

மறைத்தன எல்லாம் வெளிக்கொணர் மலையை,
    மறையுறை உட்பொருள் அனைத்தும்
முறை முறை உணரத் தருமொரு மலையை,
    முறையிலார் செய்ம்மறை எல்லாம்
திரைதனை விலக்கி வெளிக்கொணர் மலையைச்
    சிறிதுமொவ் வாதஓர் முறையில்
மறைமலை என்றே உரைத்திடல் என்னோ?
    மயங்குமால் எஞ்சிறு நெஞ்சம்.

* ஆண்டு நூறிங்கே வாழ்ந்திடு முறையை
    அறைந்த நீ தோற்பினும் ஐயா!
ஈண்டுபன் னூறாம் ஆண்டுகள் வாழும்
    இரும்புகழ் நிறுத்தலில் வென்றாய்;
தூண்டுதல் வேண்டா விளக்கெனும் நின்னூல்
    துலக்கிடும் பேரொளி வீச்சில்
மூண்டஎவ் விருளும் எதிர்வரத் தயங்கும்;
    முத்தமிழ் நெறிவிளங் கிடுமால்.

---

* மறைமலையடிகள் மக்கள் நூறாண்டு உயிர் வாழ்தல் எப்படி என்றொருநூல் எழுதியுள்ளார். ஆனால் அவர் நூறாண்டு வாழவில்லை